
பாக்கெட்
# நாவல்

விலை ரூ.6

அக்டோபர் - 2001



# காற்றில் கேட்ட குரல்

## இந்திரா சௌந்தர்ராஜன்

# காற்றில் கேட்ட குரல்

## - இந்திரா செளந்தர்ராஜன்

### 1

அழகாக வந்திருந்தது அந்த ஓவியம்!

'ஒரு தாய் தன் குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருக்கிறாள். பசியாற அந்தக் குழந்தை பாலை உறிஞ்சிக் குடிக்கையில் தாயின் முகத்தில் ஒரு அதீத பரவசம்!'

- தான் வரைந்த அந்த ஓவியத்தை சற்று தள்ளி நின்று ஒரு பார்வை பார்த்தான் தனா. முழுமையாக வரைந்து முடித்துவிட்டதைப் போல அவனிடம் ஒரு நிறைவு. கைவசம் பிடித்திருந்த பிரஷ்ஷை தண்ணீர்க் கிண்ணத்தில் போட்டுவிட்டு ஒருமுறை சோம்பல் முறித்தான்.

படபடவென உள் எலும்புகள் சப்தமெழுப்பின.

கண்டங் கழுத்தில் சாரைப் பாம்பைப் போல வியர்வைக்கோடு ஒன்று நெளிந்து, அவனது கை வைத்த பனியன் முகப்பில் இறங்கி, அதை ஈரமாக்கி முடித்தது.

கிட்டத்தட்ட மூன்று நாள் உழைப்பு.

வாரப்பத்திரிகை ஒன்று தீபாவளி மலருக்காக கேட்டிருந்த ஓவியம் அது.



அற்புதமாய் உருவாகி விட்டது.

ரசனையே இல்லாதவன் கூட பார்த்தால் பார்வையை எடுக்க முடியாதபடி கொஞ்சம் திணறிப்போவான்.

அத்தனை நேர்த்தி! அத்தனை அம்சம்!

தனாவுக்கே அந்த ஓவியத்தைப் பார்க்க பெருமையாக இருந்தது. இதை ஜெயந்தி பார்த்தால் பூரித்துப்போவாள்.

'முடிச்ச உடனே செல்லுல என்னைக் கூப்பிடு தனா. நான் வந்து பார்த்த பிறகுதான் நீ பத்திரிகைக்கு கொடுக்கணும்' என்று அவள் சொன்னதும் ஞாபகத்தில் வந்தது.

அடுத்த நொடியே டேபிள்மேல் கிடந்த செல்ஃபோனை எடுத்தான். எண்களைத் தட்டினான். அவளும் அகப்பட்டாள்.

''ஜெயாம்மா...''

''தனாவா?''

''ஆமாம்டா... கொஞ்சம் வர்றியா?''

''என்னப்பா விஷயம் - நான் இப்ப கிளாஸ்ரூம்ல இருக்கேன். புரொஃபசர் என்னை முறைச்சுகிட்டிருக்கார்.''

''சாரி... நான் அப்புறம் கூப்புட்றேன்.''

''பரவால்ல... ஷார்ட்டா சொல்லு...''

''அந்த ட்ராயிங் முடிஞ்சிடிச்சு...''

''அப்படியா... நான் கிளாஸ் முடிஞ்சதும் கட்டாயம் வரேன்.''

''உனக்காகவே காத்துக்கிட்டிருப்பேன்.''

- செல்லை முடக்கினான். திரும்பவும் ஓவியத்தைப் பார்த்தான்.

ஒரு தாய் உயிரோ்டு அமர்ந்து கொண்டு பால் கொடுத்துக் கொண்டிருக்கிற மாதிரியே இருந்தது.

இல்லையில்லை...

தனாவுக்காக ஜெயந்தியே எதிரில் அப்படி உட்கார்ந்து கொண்டிருந்தாள்!

அவன் கண்கள் லேசாக பனிக்கத் தொடங்குகின்றன. நினைவுகள் பின்னோக்கிச் செல்ல ஆரம்பிக்கின்றன.

வனஜா வழக்கமாக மாடலிங்கிற்காக வருபவள் தான். ஆனால் ஜாக்கெட்டை அவிழ்த்துக் கொண்டு ஒரு குழந்தையுடன் உட்கார வேண்டும் என்று அவன் சொல்லவும் 'சாரி சார்...' - என்று பின் வாங்கி விட்டாள்.

வேண்டுமானால் மேலாக்கு இல்லாமல் ரவிக்கையுடன் மட்டும் அமர்ந்து கொண்டு போஸ் தருவதாக சொன்னாள். அதற்கு தனா சாரி சொல்லிவிட்டான்.

வேறு யார் கிடைப்பார்கள் என்று அவன் தவித்த போது சுந்தரி என்கிற ஒரு விலைமாதுவை அவன் நண்பன் பாலு அழைத்து வந்திருந்தான்.

'சுந்தரி' எப்படி வேண்டுமானாலும் போஸ் கொடுக்கத் தயார் என்றாள்.

வெட்கமில்லாத பெண் என்பது அவள் பார்க்கும் பார்வையிலேயே தெரிந்தது. சரசரவென ரவிக்கை ஊக்கை அவிழ்த்து விட்டு எப்படி உட்கார வேண்டும் என்று அவள் கேட்டதும், அந்த அவசரமும் அவனை கொதிக்க வைத்து விட்டது.

அவளையும் தவிர்த்து விட்டான்.

அவளோ பேசின தொகையை வாங்கிக் கொண்டு தான் அவனை விட்டாள்.

''பாலு... என்னடா இது...! ஒரு நல்ல மாடல் மாட்ட மாட்டேங்குதேடா. யாராவது ஒரு தாயையே குழந்தையோட கேட்டுப்பாரேன்.''

''கேக்காம இருப்பேனா... யாரும் தயாரா இல்லை தனா. சாதாரணமா இந்த மாதிரி வேலைக்கு பஞ்சத்துல அடிபட்டது, பிராத்தல் பண்றது மாதிரி கேஸ்தான் சிக்கும். ஆனா அவங்க முகத்துல ஜீவனே இல்லைங்கறே. பேசாம இந்த படத்தை ட்ராப் பண்ணிடேன்.''

- பாலு சொன்னது தனா மனதை சற்று சங்கடப் படுத்தியது. ஜெயந்தி வந்தபோது அதை அப்படியே அவளிடம் ஒப்புவித்தான்.

''ஜெயாம்மா... இது ஒரு நல்ல அசைன்மென்ட்! ஆனா தெய்வீகமா, தாய்மையோட ஒரு பொண்ணு கிடைக்கமாட்டேங்கறா. நான் என்ன பண்ணட்டும்?'' -



கைகளைப் பிசைந்து கொண்ட அவனை சில விநாடிகள் ஜெயந்தி கூர்ந்து பார்த்தாள்.

''சரி தனா... என்ன பண்ணப் போறே?''

''வரைஞ்சா அது உயிரோவியமா வரணும். இல்லே வரையவே கூடாது. மார்பைக் காட்ற பெண்கள் செக்ஸைத்தான் தூண்டி விட்றவங்களா இருக்காங்க. பசிக்கு சோறு போட்ற ஒரு தயாளத் தன்மையும் கருணையும் தான் அந்த முகத்துல தெரியணும். சுருக்கமா சொல்லப்போனா உன்னைப் போல...''

- அவன் ஒரு உதாரணத்திற்கு அவளைச் சொல்லபோக அவளுக்கு ஒரு விநாடி சுரீர் என்றது. பிறகு என்ன நினைத்தாளோ தெரியவில்லை. ''தனா! நான் ரெடி!'' - என்று அவனுக்கு இன்ப அதிர்ச்சி தந்தாள்.

''ஜெயாம்மா நீயா...?''

''ஆமாம். எனக்கு என்னைவிட நீ முக்கியம். உன் அசைன்மென்ட் முக்கியம். எல்லாத்தையும்விட உன் வெற்றி ரொம்ப ரொம்ப முக்கியம்...''

''ஜெயாம்மா...''

''டெம்ப்ட் ஆகாதே. நான் இப்ப உன் மாடல். நீ இப்ப என் காதலன் இல்ல. இந்த இந்தியாவோட தவிர்க்க முடியாத முதல் தர ஓவியன். நான் இப்ப என்ன பண்ணணும்?''

-- பால்கோவாவை கிளறிக் கொட்டியது போன்ற இடுப்போடும், அதுவரை தொட்டுப் பரவிக் கிடந்த கூந்தலோடும், சந்திரவட்டம் போன்ற முகத்தோடும் அவள் கேட்கவும் அவன் கண்கள் பனித்து விட்டன.

அவளுக்கு ஒரு நூல்புடவையை அணிவித்து வேண்டிய விதத்தில் ஒரு குழந்தை பொம்மையைக் கொடுத்து உட்கார்த்தி வைத்தான்.

ஆடாமல் அசையாமல் அவளும் தினம் ஆறு மணி நேரம் என்று போஸ் கொடுத்தாள்.

ஒரு காதலனுக்காக காதலி செய்த மகத்தான உதவி. நினைத்துப் பார்க்கவே பிரமிப்பாக இருக்கிறது தனாவுக்கு.

கடவுள் அவன் வரையில் கருணையே இல்லாதவர் என்பது அவன் நினைப்பு. ஆனால் ஜெயந்தியை சந்தித்த பிறகு அந்த கருத்தை மாற்றிக் கொண்டான். அந்த கோடீஸ்வரன் வீட்டுப் பெண்ணும் இவன் ஓவியங்களைப் பார்த்து சொக்கிப்போனாள். சொல் இல்லாமல் ஆனாள். 'தனா... தனா...' என்று உயிரை விட்டாள்.

அவளுக்குத் தெரியாது தனா தன்னால் உயிரையே விடப்போகிறான் ஏன்று...!

## 2

டொக்... டொக்...!

- யாரோ கதவைத் தட்டினார்கள்.

கதவைத் திறந்தான் தனா.

வெளியே இரண்டு பேர்.

''இங்க தனாங்கறது?''

''நானேதான்...''

''உங்களை அருணாசலம் பாஸ் கூப்பிட்டுகிட்டு வரச் சொன்னார்...''

''யாரு... ஜெயந்தியோட அப்பா அருண்ணாசலமா?''

''ஆமாம். அவரேதான்!''

''எதுக்கு...?''

''தெரியாது. உங்களை கூட்டிகிட்டு வரச்சொன்னார்.''

- அவனுக்குள் அவர்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தினர்.

''ஒரு நிமிஷம்...'' - உள்ளே சென்றான். மேஜைமேல் கிடந்த செல்போனை எடுத்தான். ஜெயந்திக்காக அதை இயக்கினான். ஆனால் அவள் அதை முடக்கி வைத்திருந்தாள்.

அவள் வகுப்பறையில் இருப்பதால் அதற்கு வாய்ப்புகள் அதிகம் என்று யூகித்தவன் சில விநாடிகள் யோசித்தான். திரும்பிப்பார்த்தான். அவர்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''அவசியம் இப்ப நான் வந்தாகணுமா?''

''ஆமாம்... உங்க கல்யாண விஷயமா ஏதோ



பேசனும்னார்.''

- அவர்கள் சொன்னதில் ஒரு ஐஸ் துண்டம் பல்லிடுக்கில் சிக்கின மாதிரி ஒரு ஜில்லுப்பு.

''சரி...''

- ஆமோதிப்போடு அவனுக்கே உரித்தான பைஜாமா குர்தாவோடும் ஜோல்னாப்பையோடும் அவர்களோடு கிளம்பினான்.

வெளியே வரவும் வீட்டுக்காரபெண்மணி பார்த்தாள். எப்பொழுதும் போல சிரித்தாள்.

''ராதாக்கா... கொஞ்சம் வெளிய போய்ட்டு வந்துடறேன்'' என்றான் அவளிடம்.

காரும் அவனோடு சீற ஆரம்பித்தது.

கார் மதுரைக்கு வெளியே ஓடிக் கொண்டிருந்தது.

எட்டிப்பார்த்தான். மதுரை காமராஜர் பல்கலைகழகம் தெரிந்தது.

''ஜெயந்தி வீடு இந்த டைரக்ஷன்ல இல்லையே...'' - என்றான்.

''நாம இப்ப வைகை டேமுக்கு போய்கிட்டிருக்கோம்'' - என்றான் அவர்களில் ஒருவன்.

''வைகை டேமுக்கா?''

''ஆமாம்... அருணாசலம் சார் இப்ப அங்கதான் இருக்கார்.''

''அங்க எதுக்கு...?''

''தனியா மனம் விட்டுப் பேச அந்த இடம் தான் அவருக்கு தோதாம். அதான்...''

- கார் அசுரவேகம் எடுத்தது. பக்கவாட்டு புளிய மரங்கள் மின்னலாய் மறைய ஆரம்பித்தன!

ஒருவழியாக வைகை அணை முகப்பு வந்தது. மூவரும் இறங்கினார்கள். அணை நீரால் உருவான மிகப்பெரிய பூங்கா அவர்களை வரவேற்றது. சில இடங்கள் பராமரிப்பில்லாமல் காய்ந்து கிடந்தது. பல இடங்களில் ஒரே குப்பைகூளம்.

ஒரு ஆச்சரியம் போல ஜனநடமாட்டமே இல்லை.

அவர்கள்நடந்தனர்.

அவன்பார்வை அவர்களையேதுழாவியது.

''ஆமாம்... உனக்கு நீச்சல் தெரியுமா?''

- அவர்களில் ஒருவன் கேட்டான்.

''எதுக்கு கேக்கறீங்க?''

''தெரியாதுதானே...''

''ஆமாம்!''

இருவரும் ஒருவரைஒருவர்பார்த்து மர்மப்புன்னகை செய்து கொண்டனர்.

தனாவுக்கு இடறியது.

''ஏய்! நீங்க யார்...? உண்மையைச் சொல்லுங்க:'' - சீற ஆரம்பித்தான்.

ஆனால் அந்த இரண்டு பேரில் ஒருவன் முந்திக் கொண்டான். ஒரு ஸ்ப்ரேயரை எடுத்து தனாவின் முகத்தின் முன் அழுத்தினான்.

அடுத்த சில நொடிகளில் தனாவை மயக்கம் ஆக்ரமிக்கப் பார்த்தது. உடம்பும் துவண்டு கீழே விழுந்தது.

''தூக்குடா...'' - ஒருவன் கட்டளையிட இன்னொருவன் தூக்கிக் கொண்டான்.

''வேண்டாம் வேண்டாம். தோள்ல கைபோட்டு நடக்க விட்டு கூட்டிகிட்டு போற மாதிரி அப்படியே இழுத்துகிட்டுபோயிடுவோம்...''

- என்றுஅதில் ஒருதிருத்தத்தை செய்தவன் அப்படியே அவனை மையத்தில் தூக்கி நிறுத்தி, இருபக்கமும் இருவரும் நின்றுகொண்டு, அவனைதூக்கி நிறுத்தியபடி நடக்க ஆரம்பித்தனர்.

எப்படியோகஷ்டப்பட்டுதண்ணீர்தளும்பும்அணை வரை சென்றுவிட்டனர். எச்சரிக்கை பலகை ஒன்று கண்ணில்பட்டது. 'குறிப்பிட்ட இடத்திற்குமேல்பொது மக்களுக்கு அனுமதியில்லை' என்றது அது. அதை லட்சியமே செய்யாமல் நடந்தனர். தொங்கியபடி தனாவும் தொடர்ந்தான்.

காற்று ஊளைக் குரலோடு வீசிக் கொண்டிருந்தது.



உச்சி வானத்து சூரியன் மேகத்தடுப்புகள் எதுவும் இல்லாமல்கீழே நடப்பதை பார்த்துக்கொண்டிருந்தான். மூவரும் ஓரிடத்தில் ஏதோ வேடிக்கை பார்ப்பதுபோல் நின்றனர். சுற்றிச்சுற்றி பார்த்தனர்.

பார்வையாளர்கள் இல்லாத திங்கள் கிழமையின் பன்னிரெண்டுமணிப்பொழுது மிக உதவியாக இருந்தது.

கீழே குனிந்து பார்த்தனர்.

ஏராள நீர்ப்பரப்பு... அதன்மேல்காற்றின் மோதலில் 'தளக்தளக்' என்று அலை அதிர்வுகள். கொஞ்சம் மயக்கம் கூட வரும்போலத் தோன்றியது.

பார்வையை விலக்கிக் கொண்டவர்கள் தனாவை ஒரு தள்ளுதள்ளினார்கள்! அவன் உடம்பும் 'பொதேல்' என்று விழுந்து ஏராள நீர்த்தாரையை வாரி இறைத்துவிட்டு தனாவை உள் விழுங்கத் தொடங்கியது.

அந்த இருவர் முகத்திலும் வெற்றிப் புன்னகை!

## 3

மாலை ஐந்துமணி.

சிறிய அந்த சந்துக்குள் தன் காரை நுழைத்துக் கொண்டிருந்தாள் ஜெயந்தி.

தனாகுடியிருக்கும் மாடி வீட்டின்முன் நிறுத்தினாள்.

இறங்கி மாடி ஏறிச் செல்ல இருந்தவளை கீழே திண்ணையில் அமர்ந்தபடி பூக்கட்டிக் கொண்டிருந்த வீட்டுக்காரராதாம்மாவின் குரல்தடுத்தது.

''தனாவை பாக்க போறியாம்மா...?''

''ஆமாம் ஆன்ட்டி...''

''அது இல்லியே...!''

''இல்லியா - எங்க போய்ட்டான்? நான் காலேஜ் முடிஞ்சு வரேன்னு சொல்லியிருந்தேனே...!''

''தெரியலம்மா. காத்தால ஒரு பதினோரு மணி இருக்கும் - இரண்டுபேர் வந்து கூட்டிகிட்டு போனாங்க...''

''சரி. சாவி கொடுத்துட்டு போனானா...?''

''இல்லம்மா.''

- ஜெயந்தி முகத்தில் மெலிதான ஏமாற்றம்.

''சரி ஆன்ட்டி. வந்தா என்னை செல்போன்ல கான்டாக்ட் பண்ணச் சொல்லுங்க.'' - என்றபடி அங்கிருந்து திரும்பத் தொடங்கினாள்.

''கா்லேஜ்ல இருந்து நேராவர்றியாம்மா...''

''ஆமாம் ஆன்ட்டி...'' - பதிலோ்டு காரின் டோ்ரை திறக்க இருந்தவளை ஆன்ட்டியென்று அவள் நெருக்கத்தோடு கூப்பிட்ட ராதாவின் அடுத்த கேள்வி கவ்வி இழுத்தது.

''நான் ஒண்ணு உன்னை கேக்கலாமா?''

- அவள் திரும்பிப் பார்த்தாள்.

''கொஞ்சம் உள்ள வாயேன்...''

''பரவால்ல கேளுங்க...''

''உள்ள வரமாட்டியா?''

- அவளும் திரும்பினாள். வீட்டைச்சுற்றி சின்னதாக தோட்டம். தோட்டத்தில் பெரிதாக மல்லிகைச் செடி. மாலை ஆனால் பூத்துக் கொட்டும். அதைப்பறித்து தொடுத்து சாமி படங்களுக்கு போடுவது ராதாம்மாவின் வாடிக்கை. அதில் ஒரு கிள்ளை எடுத்து ஜெயந்தியிடம் நீட்டினாள்

''என்ன ஆன்ட்டி என்ன விஷயம்?'' - பூவை வாங்கி கூந்தலில் செருகியபடியே கேட்டாள்.

''ஆமா... எப்பம்மா உங்க கல்யாணம்?''

- ராதாம்மா அப்படி ஒரு கேள்வியைக் கேட்பாள் என்று ஜெயந்தி துளிகூட எதிர்பார்க்கவில்லை.

இமைகள் படபடக்க ராதாம்மாவை ஒரு மாதிரிப் பார்த்தாள். சற்று உதட்டை சுழித்து சிரித்தாள்.

''என்னடா இப்படி கேட்டுட்டேனேன்னு ஆச்சரியமாவும் அதிர்ச்சியாவும் இருக்கா?''

''இல்ல ஆன்ட்டி. அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆமா இப்ப எதுக்கு இந்தக் கேள்வியை கேட்டீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''சும்மாதாம்மா.''



''நிச்சயமா இல்லை. காரணமில்லாம கூப்ட்டு நீங்க இப்படி கேக்கறவங்களே கிடையாது.''

''புத்திசாலிம்மா நீ. உனக்கு இந்த தெருவைப் பத்தி சரியா தெரியாது. நீ இப்படி அடிக்கடி வர்றது போறத வெச்சு பலர் பலமாதிரி பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஒரு பேச்சுலர்க்கு வாடகைக்கு விட்ருக்கேன்னு எனக்கும் கொஞ்சம் கெட்ட பேர்...''

''பேச்சுலர்க்கு வீடு வாடகைக்கு விட்றது ஒரு கெட்ட விஷயமா ஆன்ட்டி?''

''அதாம்மா மிடில்கிளாஸ் மென்ட்டாலிடி.

என்னவோ தெரியல. தனா என்னை வந்து பார்த்து வீடு கிடைக்குமான்னு கேட்டப்போ என்னால அப்ப மறுக்க முடியல. நல்ல பையன்னு என் மனசு சொன்னதை வெச்சு சரின்னு விட்டேன்... கொஞ்சம் தண்ணிப் பிரச்சினை இருக்கறதால ஒரு பெரிய குடும்பத்தை விட்டா கஷ்டப்படுவோம்னுகூட தோணிச்சு. இப்படி பல காரணங்கள். அப்புறமா நீ வர ஆரம்பிச்சே. நல்லாவும் பேசிப் பழகினே. ரொம்ப ஃப்ராங்க்கா நான் தனாவை லவ் பண்றேன்னு சொன்னே. அது எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது...''

''ஆன்ட்டி! எதுக்கு இவ்வளவு பீடிகை? உங்களுக்கு இப்ப என்ன வேணும்? நாங்க கல்யாணம் செய்துப் போமா இல்லையாங்கறதுதானே?''

''ஆமாம்மா...''

''கூடிய சீக்கிரம் கல்யாணம் ஆன்ட்டி. நேத்துகூட அப்பாகிட்ட எங்க கல்யாணம் பத்திதான் பேசினேன்.''

''அதுக்கு அவர் என்ன சொன்னார்...?''

''படிப்பை முடி - பாக்கலாம்னார்...''

''அப்ப இப்போதைக்கு இல்லையா?''

''ஆமாம் ஆன்ட்டி. இன்னும் ஆறு மாசமாகலாம்.''

''சரி. உன் அப்பா சம்மதிச்சுட்டாரா?''

''சம்மதிக்காம...? சந்தேகமா...?''

''அப்ப ரொம்ப சந்தோஷம்மா. அப்புறம் இன்னொரு விஷயம்.''

''என்னஆன்ட்டி?''

''தனா படம் வரையறதுக்காக மாடலிங்குக்கு சில பெண்களைகூட்டிகிட்டுவரான்...''

''அதுக்கென்ன...?''

''அவங்களை எல்லாம் பார்த்தா 'ஒரு மாதிரி' பெண்களாதெரியறாங்க...''

''தப்பு ஆன்ட்டி. மாடலிங்குக்கு வர்றவங்களுக்கு ரொம்ப பெரிய மனசு இருக்கணும். அதைத் தெரிஞ்சுக்குங்க...''

''எனக்குத்தெரியறதுமுக்கியமேஇல்லை. என்வரைல தனாஒருத்தங்கக்கட்டி. நீஒருவைரத்துண்டு. ஆனாவீதிக்கு அப்படியெல்லாம்யோசிக்கத்தெரியாது.''

''சரி ஆன்ட்டி... இனி இந்த வீட்ல அப்படிப்பட்ட பெண்களைக் கூப்பிட்டு படம் வரையாதேன்னு சொல்லிடறேன். ஆமா... நீங்களும் இதைச் சொல்லலாமே...''

''சொன்னேன். தனா ரொம்ப வருத்தப்பட்றான். வீட்டை வேணும்னா காலி பண்ணிட்றேன்னு சொல்றான்.''

- ராதாம்மா ஆழ்ந்த வருத்தம் தொனிக்க பேசினாள். அதை - அந்த பாசத்தை ஜெயந்தியும் ரசித்தாள்.

''சரி ஆன்ட்டி. நான் தனாகிட்ட சொல்றேன். வரட்டுமா?''

''சீக்கிரமாகல்யாணச்சாப்பாடு போடு.''

''கட்டாயமா...''

- ஜெயந்தி காரைக்கிளப்பினாள். அவளது கார்அந்தப் பக்கமாகநகர்ந்திருக்கும் - இந்தப்பக்கமாகஒருஆட்டோ வந்துநின்றது. ஆட்டோவிலிருந்து கைக்குழந்தையுடன் ஒரு பெண் இறங்கினாள். நேராக ராதாம்மாளை நோக்கித்தான்நடந்தாள். ராதாம்மாவும் விசாரித்தாள்.

''யாரும்மாநீ...''

''அது... அது... இதானேதனா வீடு?''

''இது இல்ல... அது மாடி போர்ஷன்ல குடி இருக்கு. உனக்கு என்னவேணும்?''



''நான் தனாவை பாக்கணும். அவர் இருக்காரா?''

''இல்லையே... நீயாருன்னு கேட்டேனேம்மா.''

''என்பேர்ராஜேஸ்வரி. நான்அவர்மனைவி!''

- அந்த பெண் சொன்னதைக் கேட்டு ராதாம்மாவுக்கு பகீரென்றது.

''என்னம்மாசொல்றே நீ...?''

அந்தப்பெண்ணின்கண்ணில் நீர்திரள ஆரம்பித்தது. கைக்குழந்தையும் சிணுங்கத் தொடங்கியது.

''என்னம்மா? இப்ப எதுக்கு அழறே?''

''அவர்... அவர் இல்லையா?''

''இல்லம்மா. காலைல போன புள்ள. ஆமா நீ என்ன தனாவை உன் புருஷன்கறே. அதுக்கு இன்னும் கல்யாணமே ஆகலையே...''

''அப்படின்னு உங்ககிட்ட சொன்னாராக்கும்?''

''சொல்லலை - அதானே உண்மை?''

''அதை நான் சொல்லணும். அவரோட இந்த குழந்தை சொல்லணும்.''

- ராதாம்மாவுக்குள் இடி இடித்து மழை பெய்கிற மாதிரி இருந்தது. மலங்க மலங்க நெஞ்சு அதிரப் பார்த்தாள்.

''அவர்வந்துடுவார்ல?'' - அவள் தான் கேட்டாள்.

''வந்து தானே ஆகணும். வரட்டும். வரட்டும். ஆமா அதுவரை நீ இங்கதான் தங்கப்போறியா?''

- அந்தப் பெண் பரிதாபமாகதலையை அசைத்தாள்.

''ஈஸ்வரா!''

## 4

சொக்கிகுளம்

மதுரையின்சற்றேசெழுமையான பகுதி.

தனித்தனி பங்களாக்களும் - பங்களாவைச்சுற்றி மரங்களுமாய் நிறைந்த பணக்காரத் தனமான ஏரியா. அதில் டிராவல்ஸ் அருணாசலம் பங்களா என்பது கிட்டதட்ட வாஷிங்கடனின்வெள்ளைமாளிகை மாதிரி.

அதில் நுழைந்து கொண்டிருந்தது ஜெயந்தியின் கார். இறங்கியவள் பார்வை தோட்டத்து ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் அருணாசலம் பக்கம்தான் போனது. ஆச்சரியத்தில் அவளது மான்விழிகளில் அதிகபட்ச விரிவு.

சிங்கப்பூர்போவதாகசொன்னவர்வீட்டில்இருந்தால் ஆச்சர்யமாக இருக்காதா?

''டாட்...''

''வாடா!''

''என்னாச்சு டாட்? ட்ரிப்கேன்சலா?''

''ஆமாண்டா. சிங்கப்பூர்ல மீட்டிங்கை தள்ளி வெச்சுட்டாங்களாம். நல்லவேளை ஃப்ளைட் கிளம் பறதுக்கு முந்தி சொன்னாங்க. அதான் திரும்பிட்டேன்.''

''சரி... ஃபேக்டரிக்கு போகலை?''

''போகலை. ஜோசியர் வந்தாரா... பேசிகிட்டே இருந்துட்டேன்.''

''யாரு? ஜானகிராமன் அங்க்கிளா...?''

''அவரேதான்...''

''சரி டாட். டயர்டா இருக்கு. நான் போய் குளிச்சுட்டு டிரெஸ்சேஞ்ஜ் பண்ணிட்டுவரேன்.''

''வா. உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

''தெரியும். அங்க்கிள் எதாவது உளறியிருப்பார். நீங்க அதைச்சொல்லி என் மண்டையை உருட்டப்போறீங்க.''

''உளறலை. நல்லவிஷயம்தான் சொன்னார். எல்லாம் உன்கல்யாண விஷயம் தான்.''

''அதுதான் முடிஞ்சுபோன விஷயமாச்சே?''

- ஜெயந்தி மிக ஷார்ப்பாக கேட்ட விதத்தில் ஒருவித அவசரம்.

''எங்கம்மா முடிஞ்சிச்சு. இனிமேதானே எல்லாம் நடக்கணும். படிச்சு முடிச்சபிறகு கல்யாணம் பண்ணிக் கிறேன்னு சொன்னே. ஆனா அப்ப பண்ணக்கூடாதாம். பண்ணா இந்த ஆறு மாசத்துக்குள்ளையே பண்ணி டணுமாம்.''

''இது என்வரையில உளறல்தான். நான் வரேன்.''



''நில்லும்மா. உனக்கு உளறலா இருக்கறது எனக்கு ஒரு பெரிய விஷயமா இருக்கலாம் இல்லையா?''

- அவள் அருணாசலத்தை வெறித்தாள்.

''ஆறு மாசம் கழிச்சு பண்ணிக்க நினைக்கற கல்யாணத்தை இப்பவே பண்ணிக்கயேன்.''

''இப்பவேன்னா...''

''வர்ற முகூர்த்தத்துல...''

- அவர் சொல்லவும், ராதாம்மா கேட்டதும் அவளுக்குள் ஒரு சிறிய மறியலை நிகழ்த்திற்று. மௌனமாக யோசித்தாள்.

''அம்மாடி... நீ விரும்பற அதே பையன் தான் மாப்பிள்ளை. நான் உன் அப்பா. அந்த காலத்து குப்புசாமி ராமசாமி இல்லை. உன் ஆசை தான் என் ஆசை. உன் விருப்பம்தான் என் விருப்பம்.''

''போதும்பா... என் விருப்பம் ஆறு மாசம் கழிச்சு தான். ஆனா இப்பவேன்னு குதிக்க ஆரம்பிச்சுட்டீங் களே...''

''இல்லையே. உக்காந்துகிட்டுதானே பேசறேன். எங்க குதிச்சேன்?''

''ஆஹா. பெரிய ஜோக் அடிச்சுட்டதா நினைப்பாக் கும்? எப்படியோ போங்க...''

- அவள் அலுப்போடு திரும்பி நடந்தாள். செம்பருத்திச் செடி ஒன்று அவள் உயரத்திற்கு வளர்ந்து ஒரு சிவந்த பூவோடு அவளை உரசிற்று.

அதை ஒதுக்கியபடி நடந்தாள்.

''தனா! உனக்கு வேளை வந்துடிச்சுடா!'' - என்கிற முணு முணுப்பு உதட்டில். அதே சமயம் யாரோ அவள் துப்பட்டாவை பிடித்து இழுக்கிற மாதிரி இருந்தது.

''யாரது?'' - கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள். யாருமில்லை. ஆச்சரியமாகிப்போனது.

அந்த பங்களாவின் காரிடார் மிக நீளமானது. நடக்கும்போது குனிந்து முகம் பார்க்கலாம். அப்படி ஒரு பளபளப்பு. அதில் ஹைஹீல் சப்திக்க நடக்கும்போது அந்த சப்தம் துல்லியமாக எதிரொலிக்கும்.

டக்... டக்... டக்... டக்...!

அதைக் கேட்க அவளுக்கும் பிடிக்கும்.

டக்... டக்... டக்... டக்... - சப்தத்தை கேட்டபடி நடக்கும்போது 'ஜெயாம்மா...' என்றும் ஒரு குரல்!

சட்டென்று பிரேக்கடித்த மாதிரி நின்றவள் ''ஏய் தனா...'' என்றபடியே திரும்பினாள். ஆனால்யாரையும் காணோம். அவள் ''ஏய் தனா...'' என்று உற்சாகமாகக் கூவியதுதான் எதிரொலித்தது.

அவன் நினைப்பாகவே இருப்பதால் அவன் கூப்பிட்டதுபோல்தோன்றியதோ?

அவளுக்குள் கேள்வியும் பதிலும் கலந்து மோதியது. சிரிப்பு வந்தது. அடுத்த நொடியே செல் ஃபோனை எடுத்தவள் அதைத் தட்டினாள். அவனைத் தான் கூப்பிட்டாள்.

''தனா...''

''சொல் ஜெயந்தி.''

''ஜெயந்தியா...?''

''ஏன்? உன்னை வேற எப்படி கூப்பிட்றதாம்?''

''ஜெயாம்மான்னுதானே கூப்பிடுவே...''

''அப்படியா?''

''என்ன அப்படியாங்கறே ஒண்ணும் தெரியாத மாதிரி?''

''சரி என்ன விஷயம் சொல்லு?''

''ஆமா இப்ப நீ எங்க இருக்கே?''

''வீ... வீட்லதான்!''

''இப்பதான் நான் உன் வீட்டுல இருந்து வரேன். நான் அங்க இருந்து கிளம்பி வந்ததுக்கு அப்புறம் நீ வீட்டுக்கு வந்தியா?''

''அப்படியா...?''

''என்ன அப்படியா...? ராதாம்மா உன்கிட்ட சொல்லலியாக்கும்.''

''ஆங்... சொன்னாங்க சொன்னாங்க.''

''ஆமா என்னாச்சு உன்குரலே சரியில்லையே. சளி பிடிச்சிருக்கா?''



''எக்ஸாக்ட்லி. ஐஸ்க்ரீம் சாப்பிட்டது ஒத்துக்கலை.''

''இடியட். உடம்பைப் பாத்துக்கோன்னு எத்தனை தடவை சொல்லியிருப்பேன்.

''சாரி ஜெயாம்மா... வெரிசாரி.''

''என்ன சாரியெல்லாம் சொல்றே... இன்னிக்கு உன் அப்ரோச்சே வித்தியாசமா இருக்கே...''

''சரி சரி. தொண தொணங்காம விஷயத்துக்குவா.''

''தொண தொணங்கறேனா... நானா?''

''ஜெயந்தி எனக்கு நிறைய வேலை இருக்கு.''

''வேலை இருக்கா. என்கிட்ட பேசறதுதானேடா உன் வேலையே...''

''இடியட். போனைவை. தொந்தரவு பண்ணாதே!''

- மறுமுனை முடங்கிப்போய் ஜெயந்தியையும் அதிர விட்டது. கண்களில் கூட குபீர் என்று கண்ணீர் ஒகேனக்கல்லாகிவிட்டது. நெடு நேரத்துக்கு பேச்சே வர வில்லை. எப்பொழுதும் இப்படியெல்லாம் தனா பேசவே மாட்டான். இன்று என்னாயிற்று?

குழம்பிப்போனாள் ஜெயந்தி.

ஐரோப்பாவில் விளையும் ரோஸ்உட் மரத்தினாலான அதி வித்தியாசமான சோபாவில் போய் விழுந்தாள். நெடு நேரத்துக்கு ஒரே சித்ரவதையாக இருந்தது.

'ஜெயாம்மா... ஜெயாம்மா என்று உருகுகின்றவனுக்கு இன்று என்ன வந்தது?' கேள்வி மரங்கொத்திப் பறவையாக மனதைக் கொத்தியது.

'கையில் செல்போன் இருக்கிறது. நீயே அவனிடம் கேட்டுவிடேன்...' - மனதின் ஒரு மூலையில் பதில் எதிரொலித்தது.

திரும்பவும் அவனது எண்ணுக்குள் பிரவேசித்தாள். அவன் இவள் திரும்பப் பேசுவாள் என்பது தெரிந்த மாதிரி செல்போனை ஆஃப் செய்து வைத்திருந்தான். ஜெயந்தியால் அழுகையை அடக்க முடியவில்லை.

அருணாசலத்தை அந்த இரண்டு பேரும் சந்தித்து பேசிக்கொண்டிருந்தனர்.

''பிசிறில்லாம காரியத்தை முடிச்சுட்டோம் சார்...''

''அவன் உயிர் போயிடிச்சா? நல்லா தெரியுமா?''

''நல்லா தெரியும் சார். பாடியைக்கூட போலீஸ்ல வந்து தூக்கிட்டு போயிட்டாங்க.''

''உங்களை சந்தேகப்படலையே...''

''தற்கொலைன்னு பளிச்சுன்னு முடிவுக்கு வந்துட்டாங்க. 'சாவணும்னா எங்கையாவது போக வேண்டியது தானே? ஏண்டா இப்படி அணைல வந்து விழுந்து எங்க உயிரை எடுக்கறீங்க?'ன்னு போலீஸ்காரங்க பேசிகிட்டதை கேட்டோம்.''

''நியூஸ் பேப்பர்ல வருமா?''

''வரும்... அப்படியே வந்தாலும் எதாவது தமிழ் பேப்பர்லதான் வரும்.''

''உடம்பை என்ன பண்ணப் போறாங்க?''

''அநாதைப் பயதானே... நாலு நாள் பாப்பாங்க. அப்புறமா போலீஸ்காரங்களே புதைச்சுடுவாங்க...''

''போட்டோ பேப்பர்ல வருமா?''

''வரலாம். வந்தாலும் யாருக்கும் அடையாளம் தெரியாது. அந்த அளவு தண்ணியில ஊறிடுச்சு.''

''சரி... மேற்கொண்டு பேக்ஃபயர் ஆகிடாம பாத்துக்குங்க. நான் இங்க வேற ட்ராக்ல போய்கிட்டிருக்கேன்.''

''கவலைப்படாதீங்க. இந்த மாதிரி பல கேஸ்களை நாங்க பிசிறில்லாம முடிச்சவங்க.''

''சரி புறப்படுங்க. நாளைக்கு ஆபீஸ்க்கு வந்து செக்க வாங்கிக்குங்க.''

''சாரி சார். கேஷாவே கொடுத்துடுங்க.''

''சரி சரி புறப்படுங்க. என் மக வர்ற நேரம்.''

- அருணாசலம் படபடத்தார். அவர்கள் வந்தது போலவே திரும்பினர்.

அவர் எதிர்பார்த்தது போலவே ஜெயந்தியும் உடை மாற்றிக் கொண்டு திரும்பி வந்தாள். மிக சோகமாக தெரிந்தாள்.

''என்னடா... ஏன் டல்லா இருக்கே?''

''..........''



''ஜெயந்தி! உன்னைத்தாண்டா.''

''ஒண்ணுமில்லப்பா... ஒண்ணுமில்ல.''

''உன் உட்பீக்கு சொல்லிட்டியா?''

''ஆங்... சொல்லிட்டேன்... சொல்லிட்டேன்.''

''நாளைக்கு என்னை வந்து பாக்கச் சொல். ஒரு நல்ல போட்டோகிராஃபரை வெச்சு அவனை போட்டோ எடுக்கணும். சாரி... அவரை போட்டோ எடுக்கணும்'' - அருணாச்சலம் பேசிவிட்டு எழுந்து கொண்டார். அவள் அவரை பரிதாபமாகப் பார்த்தாள். அவர் முகத்தில் மர்மப் புன்னகை!

## 5

இருட்டிவிட்டது.

எரிய ஆரம்பித்த வாசல் விளக்கைச் சுற்றி ஈசல் பூச்சிகள் கொட்டமடிக்க ஆரம்பித்து விட்டன.

ஆனால் அந்தப் பெண் மட்டும் வாசல் திண்ணையை விட்டு நகரவில்லை.

அடிக்கடி ராதாம்மா வந்து பார்த்துவிட்டு போனாள்.

அவளது கணவர் ராமலிங்கம் ஆபீஸ் ட்யூட்டி முடிந்து வரவும் அவரும் பார்த்தார்.

''யார் ராதா அது வெளில?''

''பேர் ராஜேஸ்வரியாம் - நம்ம தனாவோட பொண்டாட்டியாம்!''

- ராதா காபியாற்றியபடியே சொன்னது அவரை புரை ஏற விட்டது.

''ஏய்... என்ன சொல்றே?''

''நான் சொல்லலை - அவதான் சொல்றா?''

''IS IT TRUE?''

''GO TO ASK THERE...'' - நம்பிக்கையே இல்லாதபடி கை காட்டினாள் ராதா.

''என்ன ராதா இப்படி ஒரு குண்டைப் போட்டே...''

''இது சாதாரண குண்டு இல்லீங்க. என் வரைல அணுகுண்டு. போய் அவகிட்டையே கேளுங்க.''

''சரி எதுக்கு திண்ணைல உக்காந்து கிட்டிருக்கா?''

''ஐயா வெளில போயிருக்காரு. அவர் வருகைக்காக தான்...''

''அப்படினா ட்ராவல்ஸ் அருணாசலம் பொண்ணு கதி?''

''வரட்டும்... தனாவே வரட்டும். உண்மை தெரியாமலாபோயிடும்.''

''என்ன ராதா இது... இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன் இந்த மாதிரி பசங்கள குடி வைக்காதேன்னு...''

''அவசரப்படாதீங்க. அவன் வரட்டும் விசாரிப்போம்.''

- அவள் சொல்லும்போது அந்தப் பெண்ணின் குழந்தை வாசலில் தெரிந்தது. தத்தக்காபித்தக்கா என்று நடந்து வந்தது. பார்க்க அழகு கொழித்தது.

''வாடா கண்ணு வா... வா...'' - ராதாம்மா அதை நோக்கி கைகளை நீட்டினாள்.

''இப்ப எதுக்கு அதை கூப்பிட்றே...''

''குழந்தைங்க. அதுக்கு என்ன தெரியும்?'' - அவளது தாய்மைஅவரைஅடக்கியது. குழந்தையும்அவள்கையில் வந்து அடங்கியது. ஊன்றிப் பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''தனாஜாடை இருக்கான்னு பாக்கறேன்.''

''அப்ப உனக்கு இதுல சந்தேகமெல்லாம் இருக்கா?''

''தனா நல்லபுள்ளைங்க. இந்த தெருவுல எத்தனை பெண்கள். யாரையாவது அவன் நிமிர்ந்து பாத்துருப்பானா?''

''இதோ பார். இந்த விஷயத்துல நீ இப்படியெல்லாம் எடைபோட்டே... தப்பாயிடும். தெரிஞ்சுக்க...''

- ராமலிங்கம்காபியை குடிக்காமல்கவலையோடு சீற ஆரம்பித்தார். ராதா அவரை ஒரு தினுசாக பார்த்தாள்.

''என்ன பாக்கறே?''

''என் எடை தப்பாயிடும்னு சொன்னீங்களே - எதை வைச்சு?''



''எதை வெச்சுன்னா...? வெளுத்ததெல்லாம் பாலா இருக்கணும்னு அவசியமில்ல ராதா. அது கள்ளாவும் இருக்கலாம்.''

''அப்ப தனா தப்பு பண்ணியிருப்பான்கறது உங்க முடிவா?''

''எதுக்கு நமக்குள்ற வளவளன்னு பேசிகிட்டு... கூப்புடு அந்த பொண்ணை...''

- அவளும் உள்ளே வந்தாள். புடவையை இழுத்து மூடிக்கொண்டு தலையைக் குனிந்தபடி நின்றாள்.

''ஏம்மா நீ சொல்றதெல்லாம் உண்மையா?''

- அவள் அடுத்த நொடி நிமிர்ந்து ராமலிங்கத்தை ஒரு குத்துப் பார்வை பார்த்தாள்.

''உண்மையான்னுதானேகேட்டேன். எதுக்கு இப்படி பாக்கறே?''

''இந்த விஷயத்துல எந்தப் பொண்ணாவது பொய் சொல்லுவாளா?''

''சரி... எப்ப உங்களுக்கு கல்யாணமாச்சு?''

''ஆறுமாசத்துக்கு முன்னால...''

''என்னது... ஆறுமாசத்துக்கு முன்னாலையா?''

''ஆமாம்... போன தை மாசம் பதினெட்டாம் தேதி வெள்ளிக்கிழமையன்னிக்கு திருப்பரங்குன்றம் கோவில்ல வெச்சு தாலிகட்டினார்.''

''உன் குழந்தைக்கு வயசே இரண்டு இருக்கும் போல இருக்குதே... அப்ப இந்த குழந்தை?''

''இதுவும் அவர் குழந்தைதான்...''

''என்னம்மா போட்டு குழப்பறே - ஆறுமாசத்துல கல்யாணமாகி இரண்டு வயசுல குழந்தை பெத்தியா?''

''இல்லைங்க... இரண்டு வயசுல குழந்தை இருக்கறதால தாலி கட்டியாகணும்னு சண்டைபோட்டு ஆறுமாசம் முந்தி கல்யாணம் செய்துகிட்டேன்.''

''அப்ப கல்யாணத்துக்கு முந்தியே கசமுசாவா?''

- அவள் வெட்கத்தோடு தலையை ஆட்டினாள்.

''கர்மம்டா...'' - ராமலிங்கம் தலையிலடித்துக் கொண்டார். ராதாம்மா சற்று முன்னால் வந்தாள்.

''ஆமா உங்க கல்யாணம் எப்படி... லவ் மேரேஜா?''

''இல்லை... படம் வரையறதுக்கு மாடலா கூப்பிட்டார்... ஒருநாள்...''

''ஒருநாள்...?''

''நிர்வாணமா நிக்கச் சொன்னார்.''

''புரிஞ்சு போச்சு. அப்ப தப்பு நடந்து போச்சாக்கும். ராதா... அந்த பய இனி ஒரு நிமிஷம் நம்ம வீட்ல குடி இருக்கக்கூடாது. ஞாபகம் வெச்சுக்கோ.''

- ராமலிங்கத்துக்கு பி.பி. எகிறியது. ஸ்ப்ரே செய்த மாதிரி வியர்த்தது. காபிதம்ளர் நடுங்கியது. அவள் குழந்தையோடு வெளியே போய் கடப்பைக்கல் திண்ணை மேல் தலையை சாய்த்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

உள்ளே ராமலிங்கமும் ராதாவும் முட்டிக் கொண்டிருந்தார்கள்.

''அவசரப்படாதீங்க. இதுல ஏதோ தில்லு முல்லு இருக்கறதா என் மனசு நினைக்குது.''

''மண்ணாங்கட்டி. தில்லு முல்லாவது கில்லு முல்லாவது. அதான் புட்டுபுட்டு வைக்கறாளே?''

- ராமலிங்கம் பேசிக் கொண்டு சுவரைப் பார்த்தார். அதில் தனா வரைந்து பிரசன்ட் செய்திருந்த ஓவியம்.

ராமன் சீதையுடன் நிற்கும் படமாக வரைந்திருந்தான்.

''இவன் வரைஞ்சு கொடுத்துருக்கற படத்தைப் பார்த்தியா...?'' - கேள்வியோடு அதைப் பிடுங்கி எரியப்போனார்.

யாரோ தடுத்து சட்டைக்காலரைப் பிடித்து பின்னால் இழுக்கிற மாதிரி இருந்தது.

''விடு ராதா... இந்த படத்தைப் பார்த்தா அவன் ஞாபகம் தான் வரும். தூக்கி எரிஞ்சுட்டுதான் மறுவேலை.''

- என்றபடி படத்தின்மேல் கைவைக்கப்போனவரை தடுத்து ஆச்சரியமாகக் கேட்டாள் ராதா.

''என்னங்க சொல்றீங்க... நான் என்னமோ பிடிச்சு இழுக்கற மாதிரி விடுங்கறீங்க?''



''அப்ப நீ இழுக்கலையா...?''

''நான் என்னிக்குங்க இப்படி எல்லாம் நடந்துகிட்டிருக்கேன்?''

''அப்ப யார் என்ன பிடிச்சு இழுத்தது...?''

- கேள்வியோடு சுற்றிச் சுற்றிப் பார்த்தார். தேடாதே என்பது போல போன் கிணு கிணுத்தது. படம் நினைப்பு பின்னுக்கு போனது. போய் ரிஸீவரைக் கையில் எடுத்தார்.

''அங்க்கிளா...?''

''யார் தனாவா?''

''ஆமாம் அங்க்கிள்...''

''எலேய்... எங்க இருந்துடா பேசறே?''

''எதுக்கு கேக்கறீங்க அங்க்கிள்?''

''இங்க உன் பொண்டாட்டி குழந்தையோட வந்து உக்காந்துகிட்டிருக்கா. கொஞ்சம் கிளம்பி வர்றியா?''

''என்ன அங்க்கிள் சொல்றீங்க... ஜெயந்தியா வந்துருக்கா?''

''டேய்... டேய்... பாவம்டா அந்த பொண்ணு. அவ பேரை சொல்லக் கூட உனக்கு யோக்யதை கிடையாதுடா இடியட். எங்களை எல்லாம் இளிச்சவாயனாக்கிட்டியேடா...'' - ராமலிங்கம் சத்தம்போடத் தொடங்கிவிட்டது வீதியில் எதிரொலித்து சிலர் நின்று கூட திரும்பிப் பார்த்தனர்.

''ஐயோ அங்க்கிள்... என்ன சொல்றீங்க?''

''ம்... சுரைக்காய்க்கு உப்பில்ல - சுயபுத்தி எங்களுக்கில்லேங்கறேன். ஸ்கௌண்ட்ரல். உன் வண்டவாளம் தண்டவாளத்துல ஏற ஆரம்பிச்சிடுச்சு தெரியுமா...?'' - ராமலிங்கம் அப்பளம் பொரிகிற மாதிரி பொரியத் தொடங்கினார். ராதா நெருங்கி வந்து ரிஸீவரைப் பிடுங்கினாள். அதை மூடியபடி ''ஏன் இப்படி டென்ஷனாகிக்கத்தறீங்க. அவன் ஒண்ணும் உங்க மகன் இல்லை. நம்ம டெனன்ட். வார்த்தையை அளந்து பேசுங்க.'' - என்றபடியே அவனிடம் பேசத் தொடங்கினாள்.

''தம்பி தனா...''

''அக்காவா?''

''ஆமாம்நானேதான்... எங்க இருந்துப்பாபேசறே?''

''ராதாக்கா நான் காந்தி மியூசியத்துல இருந்து பேசறேன். ஜெயந்தி வந்தாளான்னு தெரிஞ்சுக்கதான் போன்பண்ணேன். அங்க்கிள் என்னடான்னா பயங்கரமா கத்தறாரே...''

''அவ வந்துட்டுபோய்ட்டாப்பா. ஆமாஅது யாருப்பா ராஜேஸ்வரி?''

''ராஜேஸ்வரியா?''

''ஆமாம்... ராஜேஸ்வரின்னு ஒரு பொண்ணு ரொம்ப நேரமா வந்து உக்காந்துகிட்டிருக்கா. கேட்டா உன் பொண்டாட்டிங்கறா. என்னடாதம்பி இதெல்லாம்...?''

''அக்கா அது வந்து...''

''என்னப்பா... அவளை உனக்கு தெரியுமா?''

''அக்கா...''

''என்ன அக்கா... அவ சொல்றதெல்லாம் உண்மையா?''

''இப்ப அவ இருக்காளாக்கா...?''

''இருக்காளாவா...? இரண்டு மணிநேரமாஇங்கதான் உக்காந்துகிட்டிருக்கா. என்கேள்விக்கு பதில்சொல். அவ சொல்றதெல்லாம் உண்மையா?''

''அக்கா அது வந்து...''

''என்னப்பா நெளியறே? நீ மென்னு முழுங்கறத பார்த்தா அது தான் உண்மையா?''

''.........''

''தம்பி...''

''.........''

''தம்பி தனா... என்னப்பா பேச்சைக் காணோம்?''

''சாரிக்கா... வெரிசாரிக்கா. ஒருநாள் என்னைமீறிதப்பு நடந்துடிச்சு. அதுல...''

''அடப்பாவி... அப்ப அது உண்மையா?''

''.........''

''இப்படி மௌனமாநின்னாஎப்படி? உன்மேலநான் எவ்வளவு நம்பிக்கை வெச்சிருந்தேன் தெரியுமா?''



''என்ன ராதா... என்ன சொல்றான் அந்த ஸ்கௌண்ட்ரல்...? மாட்டிகிட்டது தெரிஞ்சு சமாளிக்கிறானா?''

- ராதா ரிஸீவரை அவர்வசம் தந்தாள். இடிந்தது போல் ஹாலில் கிடந்த நாற்காலியில் போய் அமர்ந்தாள்.

''என்ன ரோமியோ சார்.... எல்லாம் உங்க திருவிளையாடல்தானா?''

''அங்க்கிள் வெரி சாரி அங்க்கிள். என்னை மன்னிச்சுடுங்க.''

''மன்னிக்கறதா... மூதல்ல நீ மாடியை காலி பண்றே. உன்னைப்போய் உத்தமன்னு நினைச்சுகிட்டு என்கிட்ட பேசறா என்பொண்டாட்டி. சிவாஜி எல்லாம் உன்கிட்ட பிச்சை வாங்கணும் - பெரிய நடிகன்டா நீ.''

''கோபப்படாதீங்க அங்க்கிள். போனை கொஞ்சம் ராஜேஸ்வரிகிட்ட தர்றீங்களா?''

''எதுக்கு... அவளை கடிச்சுக் குதறவா? ஸ்கௌண்ட்ரல் - ஸ்கௌண்ட்ரல்.''

''நீங்க எவ்வளவு வேணா திட்டுங்க அங்க்கிள். இப்ப போனை அவகிட்ட கொடுங்க...''

- ராமலிங்கம் கொஞ்சம் தயங்கிவிட்டு ''அம்மாடி...'' - என்று வாசல் புறம் பார்த்து கத்தினார். அவளும் எட்டிப் பார்த்தாள்.

''இங்கவா... உன்புருஷன் பேசறான்.'' - கூப்பிட்டார். அவளும் எழுந்து வந்தாள். கைகள் நடுங்க ரிஸீவரை வாங்கினாள். காதில் வைத்து நடுங்கும் குரலில் ''அத்தான்...'' என்றாள். ராமலிங்கமும், ராதாவும் வைத்த விழியை எடுக்காதபடி அவள் பேசுவதைப் பார்த்தனர்.

''சரிங்க... சரிங்க... வெரி சாரிங்க... நான் இனிமே இந்த பக்கமே வரமாட்டேங்க. நல்லதுங்க...''

- என்றபடி ரிஸீவரை கீழே வைத்தாள். தன்னையே வெறித்தபடி இருக்கும் அவர்கள் இருவரையும் பார்த்தவள் கண்ணீரோடு கைகளைக் கூப்பினாள். குழந்தையோடு வெளியேறவும் தொடங்கிவிட்டாள்.

''அம்மாடி... எங்க கிளம்பிட்டே?''

''அவர் என்னை போகச் சொல்லிட்டார்.''

''போகச் சொல்லிட்டானா... எங்க?''

''என் வீட்டுக்கு...''

''நான்சென்ஸ்... அப்ப எதுக்கு இங்க வந்தே?''

- அவள் சிலையாக நின்றாள். குழந்தை அவள் தலைமுடியை அழற்றியது. பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''நீ இங்க இருந்து போகக்கூடாது.'' - ராமலிங்கம்தான் அப்படிச் சொன்னார். ராதா அதிர்ச்சியுடன் அவரை ஊடுருவினாள்.

''அவன் வரட்டும். நேர்லவெச்சு ஒரு மண்டலப்படி நடத்திட்டுதான் மறுவேலை.''

''வேண்டாங்க... என்னால அவருக்கு எதுக்கு கெட்ட பேர்?''

''அடடா... புருஷனுக்காக பெரியமனசு பண்றியாக்கும். விட்டா ஜெயந்தி, ராஜாத்தி, மீனாட்சி, காமாட்சின்னு வரிசையா உனக்கு ஒரு போட்டி உருவாயிடும். இங்கேயே இரு. நீ இங்க இருந்து போனா அவனோடதான் வெளியே போகணும்.''

''ஐயோ வேண்டாங்க. உங்களுக்கு துளி சிரமம் கூட தரக்கூடாதுன்னு சொல்லியிருக்காரு.''

''போதும் அவனோட போலிக்கரிசனம். இனிமே எங்க சிரமம் எங்களுக்கு பெரிசில்ல. உன் சிரமம் தான் எங்களுக்கு பெரிசு. ராதா மாடிப்பூட்டுக்கு ஸ்பேர்சாவி இருக்குல்ல?''

''இல்லைங்க... அது அவன்போட்ட பூட்டு.''

''உடைக்கறேன்... அவன் வர்றவரை இந்த பொண்ணு அங்கதான் தங்கணும். வா என்கூட...''

- அவர் ஆவேசமாக உள்ளே போய் ஒரு பெரிய ஹேமரை எடுத்து வந்தார். மாடிப்படி நோக்கி வேகமாக நடந்தார். திரும்பவும் பின்னால் இருந்து யாரோ சட்டைக் காலரைப் பிடித்து இழுக்கிற மாதிரி இருந்தது. கோபமாக திரும்பினார். யாருமில்லை. ராதாவும் அவளும்தான்!



''சட்டைக்காலரை பிடிச்சு இழுத்தியா?''

''இல்லீங்களே...''

- அவர் அதன் பிறகு எதுவும் கேட்கவில்லை. பூட்டை உடைக்க புறப்பட்டுவிட்டார்!

# 6

டி.வி.யில் சித்தி ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் ஜெயந்தியின் கவனம் அதன் மேலில்லை. குட்டி போட்ட பூனை போல நடந்து கொண்டிருந்தாள். நைட் டிரஸ்ஸில் அருணாசலம் வந்தார்.

''என்னம்மா டி.வி. பார்க்காம நடந்துகிட்டிருக்கே?''

''ஒண்ணுமில்லப்பா...''

''அப்ப நிறைய இருக்கு... என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லேங்கறேன்ல...'' - சீறினாள் ஜெயந்தி. அவர் அதை ரசிக்கிற மாதிரி சிரித்தார்.

''சரி என் கூட கொஞ்சம் பேசற மூட்லையாவது இருக்கியா நீ?''

''சொல்லுங்க...''

''நான் முகூர்த்த தேதி குறிச்சிட்டேன்.''

- அவள் சற்று திடுக்கிட்டாள்.

''வர்ற 27 ஆம் தேதி நாள் நல்லா இருக்காம். உனக்கு ஆட்சேபணை இல்லையே?''

''அப்பா...''

''தெரியும் நீ என்ன சொல்லப்போறேன்னு... தயவு செய்து 'கல்யாணம் இப்ப வேண்டாம்' நான் ஹவுஸ் சர்ஜனா சர்வீஸ் பண்ணினதுக்கு அப்புறம்'னு மட்டும் சொல்லிடாதே.''

''இல்லப்பா... நான் அதைத்தான் சொல்லப்போறேன். கல்யாணம் இப்ப வேண்டாம். சொன்னா கேளுங்க.''

''ஏம்மா, தனா எதாவது சொன்னானா... சாரி எதாவது சொன்னாரா?''

''அவனுக்கு இன்னும் விஷயமே தெரியாது. தெரிஞ்சாலும் நான் சொல்றதுதான் அவனுக்கு வேதம்.''

''அப்புறமென்ன...?''

''அப்புறமென்னன்னா? இது என்ன கேள்வி. கல்யாணம் எங்க சொந்த விஷயம். அதை இப்படித்தான் செய்துக்கணும்னு நாங்க ஒரு மாதிரி பிளான் போட்டு வெச்சிருக்கோம்.''

''எப்படி...?''

''உங்க ராஜ தர்பாருக்கெல்லாம் இடம் கிடையாது. சிம்பிளா ரிஜிஸ்டர் மேரேஜ். அதுக்கப்புறம் அநாதை இல்லம் ஒண்ணுக்கு போய் அங்க இருக்கறவங்களுக்கு துணி எடுத்துக் கொடுத்து சாப்பாடு போட்டு அவங்க ஆசீர்வாதத்தை வாங்கிக்கப் போறோம். தட்ஸ் ஆல்!''

''அதை வர்ற 27 ஆம் தேதி செய்துட்டு போங்களேன்...''

''பாத்தீங்களா திரும்பத் திரும்ப உங்க முடிவுக்கே என்னை இழுக்கறீங்க?''

''இதோபாரும்மா. நீ நாள் கிழமையை நம்பறியோ நம்பலியோ - நான் நம்பறேன். இப்ப கல்யாணம் செய்துகிட்டா நீங்க காலத்துக்கும் நல்லா இருப்பீங்களாம். அதனாலதான் சொல்றேன்.''

''நாங்க எப்ப கல்யாணம் செய்துகிட்டாலும் நல்லாதான் இருப்போம். ஞாபகம் வெச்சுக்குங்க.''

''சரி உன்கிட்ட என்ன பேச்சு. நானே மாப்ளைகிட்ட பேசறேன். இந்த விஷயத்துலையாவது என் பேச்சைக் கேளுங்கன்னு சொல்றேன்.''

- அருணாசலம் ஒரு முடிவோடு தொலைபேசி இருக்கும் இடம் நோக்கிச் சென்றார்.

எண்களைச்சுழற்றினார். மறுமுனையில் அவனோடு பேசத் தொடங்கினார்.

''மாப்ள...! நான் அருணாசலம் பேசறேன்.''

- ஜெயந்தி அவரையே முறைத்துக் கொண்டிருந்தாள். பதிலுக்கு அவர் முகம் கன்னாபின்னாவென்று மாறியது.

''மாப்ள! நீங்களா இப்படிப் பேசறது... மாப்ள... மாப்ள...''

- என்றவர் துவண்டு போய் ரிஸீவரைக் கீழே வைத்தார்.



ஜெயந்தி ஆச்சரியமாக பார்த்தாள்.

''என்னப்பா சொன்னார்...?''

''தொந்தரவு பண்ணாதேடா அருணாசலம் கறாரும்மா...''

''தொந்தரவா... என்ன சொல்றீங்க?''

''நீயே பேசிப்பாரு...''

- அவள் ரிஸீவரை தொடப்போனாள் ''ஜெயாம்மா...'' தனாவின் குரல் வெகுதூரத்தில் இருந்து அவன் அழைக்கும் தினுசில் காதில் கேட்டது.

ஒருமுறை கொடைக்கானல் போனபோது ஒரு மலை முகட்டில் இருந்து கொண்டு அவன் கத்தினான். ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூர இடைவெளி இருக்கும் இருவருக்கும் இடையில்... அப்பொழுதுகூட இப்படித்தான் கேட்டது. இப்பொழுதும் அதே போல் காதில் ஒலிக்கவும் சரேலென்று நிமிர்ந்து சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். பத்தடி தூரத்தில் கர்ட்டன் மூடிய ஜன்னல். ஓடிச் சென்று அதை விலக்கிவிட்டு வெளியில் பார்த்தாள். வீதி தெரிந்தது.

''என்னம்மா, போன் பண்ணாம யாரைத் தேட்றே?''

''தனா குரல் இப்ப காதுல கேட்டுச்சுப்பா...''

''தனா குரலா...? எனக்கு கேக்கலையே...''

''இல்லப்பா. என்காதுல கேட்டுச்சு. அதான் பாக்கறேன்.''

''என்ன பொண்ணும்மா நீ. நான் இப்பதான் போன்ல பேசிட்டு வெச்சுருக்கேன். அவன் தண்ணியடிச்சுட்டு போதைல இருக்கான். அதுவும் எங்கையோ ஒரு பார்ட்டி கிரவுண்டுல...''

''நிஜமாவாப்பா...?''

''போன் பண்ணிப்பார். நான் சொல்றது நிஜமா பொய்யான்னு தெரியும்.''

- ஜெயந்தி ஓடிச் சென்று எண்களைத் தட்டினாள். அவனையும் அந்த கருவி முலமாக கைப்பற்றினாள்.

''ஏய் தனா எங்க இருக்கே இப்ப நீ?''

''எதுக்கு கேக்கறே?''

''உனக்கு என்ன ஆச்சு? நான் முந்தி போன்

பண்ணப்போமுஞ்சில அடிச்ச மாதிரி பேசினே - இப்ப அப்பா பேசியிருக்கார். அவர்கிட்டையும் அலட்சியமா பேசியிருக்கே?''

''பெரிய அப்பா... நாம கல்யாணம் செய்துக்கக் கூடாதுன்னு எல்லா வில்லத்தனமும் செய்தவர் தானே அவர்?''

''தனா! எதுக்கு இப்பபோய் இதையெல்லாம் சொல்றே? உனக்கு என்ன ஆச்சு?''

''சாரி ஜெயந்தி. என்னைத் தொந்தரவு செய்யாதே. போனை வை.''

-அவன் பதில் ஜெயந்தியைக் குப்புறப் பிடித்துத் தள்ளிய மாதிரி இருந்தது. ரிஸீவரை நழுவவிட்டாள். தொடர்ந்து மர்மப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த அருணாசலம் ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கத் தொடங்கினார்.

''என்னம்மா என்ன சொல்றார் மாப்பிள்ளை?''

''அவனுக்கு திடீர்னு பைத்தியம் பிடிச்சுடுச்சுப்பா.''

''என்னம்மா சொல்றே...? உங்களுக்குள்ள ஏதாவது ஊடலா?''

''ஊடலும் இல்ல கூடலும் இல்லப்பா. இது எனக்கே பயங்கர ஷாக்கா இருக்குப்பா. அவன் ஏன் இப்படியெல்லாம் நடந்துக்கறான்னு தெரியலியே...''

-அவள் குமையத் தொடங்கினாள்.

''விடும்மா... எதுக்கு போட்டு அலட்டிக்கறே. காலைல நானும் வரேன். வீட்லையே போய் பாத்துட்டு வந்துடுவோம். என்ன சொல்றே?''

-அவள் மௌனமாக தலையை ஆட்டினாள். அதை வருடிக் கொடுத்தபடியே வெளியேறினார்.

அருணாசலம் தனது பெட்ரூமுக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண்ட மறுநிமிடம் தொலைபேசியைத்தான் கையில் எடுத்தார்.

''மனோஜ்...''

''சொல்லுங்க அங்க்கிள். மனோஜ்தான் பேசறேன்.''

''எல்லாம் கரெக்ட்டா நடந்துகிட்டு இருக்கு. நீ ரெடியா



இரு. அதுக்குத்தான் போன் பண்ணேன்.''

''ரொம்ப சந்தோஷம் அங்க்கிள். அவன் ஊரைவிட்டு ஓடிட்டானா?''

''ஊரைவிட்டா... உலகத்தை விட்டே அனுப்பிட்டேன்!''

''அங்க்கிள்...''

''நீ எதுக்கு பயப்பட்றே? இந்த உலகத்துலதான் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு விலை இருக்கே. அதை கொடுத்துட்டா காரியம் முடிஞ்சு போயிடுது.''

''இந்த விஷயம்லாம் ஜெயந்திக்கு தெரியுமா?''

''சுத்தம்... தப்பித்தவறியும் தெரியாது. தெரியவும் கூடாது.''

''IS IT POSSIBLE?''

''இந்த மாதிரி பல கேள்விக்குறிகளை ஆச்சரியக் குறியாமாத்தினவன் இந்த அருணாசலம். நீ மட்டும் என் பேச்சைக் கேட்டா போதும். அப்புறம் நான் வைக்கறது தான் சட்டம்.''

''நான் எப்பவும் உங்க அடிமை அங்க்கிள். நீங்க செதுக்கின சிற்பம் தானே நான்.''

''எனக்கே அர்ச்சனையா?''

''தப்பில்ல அங்க்கிள். உங்களுக்கு தாராளமா அர்ச்சனை பண்ணலாம். நீங்க அறிவோட சொரூபம். எதை எப்படி அடையணும். எதை எப்படி சாய்க்கணும்னு உங்களுக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கு.''

''சரிப்பா. இது ஒண்ணும் லோக்கல் கால் இல்ல ISD கால். நான் அப்புறமா பேசறேன். நீ ஒரு வாரத்துல கிளம்பி வந்து சேர்.''

''வந்தா கல்யாணம் தானே?''

''நிச்சயமா!''

## 7

படுக்கையில் மல்லாந்திருந்தாள் ஜெயந்தி. அறையின் ஏ.சி. இயந்திரம் போடும் சப்தம் காதை சற்று நிரடியது.

ஆஃப்செய்துவிட்டு வந்து புரண்டு படுத்தாள்.
அவன் அவளையே வரைந்து தந்திருந்த ஓவிய
கண்ணில்பட்டது.
அதுதான் அவள் அவனைச் சந்திக்கவும் முத
காரணமாக அமைந்தது. அவளுக்குள் அந்த நினைவுக
தோட்டத்துப்பட்டாம்பூச்சிகளாய் சிறகுகளை விரித்
அசைக்கின்றன.

ராணிசீதை ஹாலில்தான் அந்த ஓவியக் கண்காட்
நடந்துகொண்டிருந்தது.
மிக வித்தியாசமான கண்காட்சி. வரைந்
ஓவியங்களை காட்சிக்கு வைக்காமல் ஓவியங்கள
அங்கேயே வந்து வரையும் ஒருவிதமான வித்தியாசமா
போட்டி, எட்டிப் பார்த்த போது பலரும் வரைந்
கொண்டிருந்தார்கள். ஓவியத்திற்கான தலைப்பு
அங்கேதான் சொன்னார்கள் அதற்கு ஏற்ப கற்பனை
யிலேயே வரையவேண்டும். தனாவும் வரைந்
கொண்டிருந்தான். கூரிய கத்தியின் நுனிமேல் ஒ
பட்டாம்பூச்சி அமர்ந்திருக்கும் அவனது பட
ஜெயந்தியை சுண்டி இழுத்தது.
''பியூட்டிஃபுல்'' என்று கைதட்டினாள். அவனோ
கை குலுக்கிவிட்டு ஒரு ரவுண்டு வந்தாள். ஏறத்தா
மூன்றுமணிநேரம்!
வெளியேறும் போது தனா படம் வரையும் இட
வழியாகத்தான் வெளியேற வேண்டும். அப்பொழு
மீண்டும் ஒருபார்வை. இந்தமுறை ஜெயந்திக்கு இன்
அதிர்ச்சி காத்திருந்தது.
அவன், அவள்பியூட்டிஃபுல் என்று பாராட்டியதை
படமாக வரைந்து முடித்து ஃபைனல் டச் கொடுத்
கொண்டிருந்தான்.
அவள் அன்று சுடிதாரில் வந்திருந்தாள். ஆனா
படத்தில் ஆடைமட்டும் மாறி பட்டுப்புட
உடுத்தியிருந்தாள். வாஸ்தவத்தில் அதே போ
பட்டுப்புடவை உடுத்திக் கொண்டுதான் வரவேண்டு



என்று எண்ணியிருந்தாள். ஆனால் கடைசி நிமிஷத்தில் அது மாறிவிட்டது.

நிஜத்தில் செயலாகாத அவளது ஆசை படத்தில் பூர்த்தியாகியிருந்தது. அவள் மனது அவனுக்கு எப்படி தெரியும்?

ஜெயந்தியால் வைத்த விழியை வாங்க முடியவில்லை. ஓவியம் அத்தனை தத்ரூபமாக இருந்தது.

''ஹலோ... என்ன இது...?'' - உற்சாகத்தில் கூவினாள்.

''வாங்க மேடம். நீங்க பாராட்டின விதம் ரொம்ப இம்ப்ரஸிவா இருந்தது... அதான் அதையே வரைஞ்சிட்டேன்.''

''என்னைப் பாக்காமலே எப்படி இப்படி வரைய முடிஞ்சது?''

''உங்களைப் பாத்ததாலதான் இதையே வரைஞ்சிருக்கேன். பாக்காமலேன்னு சொன்னா எப்படி மேடம்?''

''ஐமின் நான் போஸ் கொடுக்காமலே வரைஞ்சிருக்கீங்களே அதைச் சொன்னேன்.''

''எனக்கு ஒரு உருவம் மனசுல பதியறதுதான் கணக்கு. உங்க பாராட்டும், பாராட்டும்போது தாமரை விரிஞ்சமாதிரி என் கண்ணுக்கு தெரிஞ்ச உங்கமுகமும் அச்சு அசலா மனசுல பதிஞ்சிடிச்சு.''

''நம்பவே முடியல. ஆமா எதுக்காக புடவை?''

''புடவைதான் உங்களுக்கு அழகு. அதுலையும் பட்டுப்புடவை உங்களுக்கு அழகோ அழகு''

''எனக்கும் பட்டுப்புடவைன்னா ரொம்ப பிடிக்கும்.''

''இப்படி ஒரு சாமுத்ரிகா லட்சணம் இருந்தாலே அவங்க ஆசைகள் உயர்வாதான் இருக்கும்.''

''உயர்வான்னா...? புரியலை.''

''எல்லா விஷயத்துலையுமே அவங்க டாப்ல இருக்கத்தான் நினைப்பாங்க. படிப்பு, வேலை எதுன்லயும் சராசரித் தன்மையே இவங்களுக்கு பிடிக்காது.''

''ஓ... ஒண்டர்ஃபுல். உங்களுக்கு சாமுத்ரிகா லட்சணமும் தெரியுமா?''

''ஏதோ கொஞ்சம் கொஞ்சம். உங்க பேர் மேடம்?''

''ஜெயந்தி.''

''காலேஜ் ஸ்டூடண்ட்டா?''

''ஆமாம். எம்.பி.பி.எஸ். தேர்ட் இயர்ஸ்டூண்ட் நா உங்க பேர்?''

''தனசேகர்... தனான்னு சொன்னா நல்லாருக்கும் தெரியும்.''

''தனா... ஸ்வீட் நேம்! உங்க வீடு எங்க இருக்கு?'' அவன் ராமலிங்கம் வீட்டு முகவரியைச் சொன்னா அவள்தன் முகவரியைச் சொல்லவும் ஆடிப்போனா

''நீங்க அருணாசலம் சார் மகளா?'' - என்று கேட் செருமாந்தான்.

''ஆமா. உங்கப்பா என்ன பண்றாரு?''

''என் அப்பா என் அம்மாவோட இருக்காரு.''

''அம்மா என்ன பண்றாங்க... ஹவுஸ் வைஃபா?''

''ஆமாம். ஹவுஸ் வைஃப் இன் ஆகாசம்!''

''ஆகாசமா?''

''ஆமாம். அவங்க செத்துப் போய் இருபது வருஷ ஆயிடுச்சு. அப்பாவும் துணைக்கு கூடவே போய்ட்டாரு.

''அப்ப நீங்க...?''

''செயின்ட் ஜான்ஸ் சர்ச்சுக்கு சொந்தமான அனா இல்லத்துல வளர்ந்தேன். ஃபாதர் கேபிரியல் ஓவிய வரையக் கத்துக் கொடுத்தார். இப்ப இதுதா வாழ்க்கையை வாழ எனக்கு கத்துக் கொடுத்துக்கி டிருக்கு...''

- சுருக்கமாக அவன் தன் வரலாறை சொல் முடித்தான். அவளுக்கு இதயப் பகுதியில் பால் சுரந்தது அதன் பின் எவ்வளவோ சந்திப்புகள்.

அதில் ஒரு சந்திப்புதான் அவளை அவன்பால் காத கொள்ள வைத்தது. அவள் அவனை சந்திக்க சென்றபோது ரதியைப் போன்ற ஒரு பெண் அவனுக் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவனும் அவளை ஒத்தி எடுத்துக் கொண்டிருந்தான், அந்தப் பெ வேண்டுமென்றே அவன் கவனத்தைக் கவர்வதற்கா புடவை மேலாக்கை சரித்து சரித்து விட்டுக் கொண்டாள்



செழுமையான மார்பகங்களைக் காட்டி அவனை மயக்க அவள் முயற்சிப்பது ஜெயந்திக்கு புரிந்து போயிற்று. ஜெயந்தி வந்ததை அவர்கள் இருவருமே உணரவில்லை. அவளும் ஓவியத் தவத்தின்போது குறுக்கிட விரும்ப வில்லை. ஆனால் அங்கே நடந்து கொண்டிருப்பது தவமா இல்லை ஏதாவது கவர்ச்சி விளையாட்டா என்று சந்தேகம். வந்து விட்டது.

அவன் அதை ரசிக்கின்றானா என்று பார்த்தாள். எந்த ஆண் இந்த மாதிரி லைவ் ஷோவை புறக்கணிப்பான்? தனாவும் ஜொள்ளுவிடப் போகிறான் என்றுதான் நினைத்தாள். ஆனால் அவன் சட்டென்று பாதி வரைந்த நிலையில் பிரஷ்ஷை வாஷ் சூஷில் போட்டுவிட்டு அவளை நோக்கிச் சென்றான்.

அவள் கிறக்கமாக சிரித்தாள். ''தெரியும்... நீங்க கிட்ட வருவீங்கன்னு தெரியும்.'' - என்று குழறலாகப் பேசினாள். அவன் அவளை முறைத்தான். பின் ஆணிக்காதில் தொங்கிக் கொண்டிருந்த சட்டையில் இருந்து பர்ஸை எடுத்து வந்து அதிலிருந்து பணத்தை எடுத்தான்.

''தனா! உங்க வரைல நான் பணத்துக்காக வரலை. ஐ லவ் யூ...'' என்றாள் அவள்.

''பட் ஐ ஹேட் யூ... இந்தா உன்னோட கூலி. இடத்தைக் காலி பண்ணு...''

- அவள் திடுக்கிட்டாள்.

''ஒவ்வொரு மாடலையும் நான் கலைத்தாயா, தேவதையாதான் நினைக்கறேன். அப்படி நினைச்சாதான் உயிரோட்டமான ஓவியங்களை வரைய முடியும். ஆனா நீ என் பார்வையையே கொச்சைப் படுத்தப் பாக்கறே. இனி இந்தப் பக்கமே தலை வைச்சு படுக்கக் கூடாது நீ...''

- அவனிடம் வார்த்தைகள் வெடித்தன.

''தனா! நீங்க தப்பா புரிஞ்சுட்டீங்க. உண்மையிலேயே உங்களை நான் நேசிக்கிறேன்.'' என்றாள் அவள்.

''நேசிக்கிற ஒரு பொண்ணு மனசைத்தான் காட்டணும். மார்பை இல்ல. முதல்ல வெளியே போ...''

''தனா! ஐ ஆம் சாரி...'' அவள் போகாமல் கண்களில் கண்ணீரைத் திரட்டினாள்.

''போன்னு சொல்றேன்ல...''

''சாரி தனா... உங்களை என்னைப் பார்த்து ஜொள்ளு விட்ற பல ஆண்கள்ல ஒருத்தன்னா நினைச்சுட்டேன். நான் உங்களை சும்மா டெஸ்ட் பண்ணினேன்.''

''போஸ் கொடுத்து உதவி செய்ய வந்தியா - இல்லை டெஸ்ட் பண்ணி என்னை ஆராய்ச்சி பண்ண வந்தியா இடியட். முதல்ல இடத்தை காலி பண்ணு...''

''தனா...''

''இப்ப நீ போறியா - இல்லை நான் வெளிய போகட்டுமா?'' தனாவின் குரலில் சப்தம் கூட ஆரம்பித்தது. அவள் மிரள மிரளப் பார்த்தபடி அங்கிருந்து நழுவ ஆரம்பித்தாள். வெளியேறும் போதுதான் ஜெயந்தியை பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்துவிட்டு ''வாங்க மிஸ் ஜெயந்தி'' என்று ஒரு மோடாவை தூக்கிப் போட்டான்.

''கிரேட் தனா... நீங்க ரொம்ப கிரேட்...'' என்றபடி அதில் அமர்ந்தாள் அவளும்.

''கிரேட்டா...? என்ன சாதிச்சுட்டேன்னு மேடம் என்னை பாராட்றீங்க?''

''ஒரு பொண்ணு தயாரா இருந்தும் அவளைத் தொடாம வெளிய அனுப்பறது கிரேட் இல்லியா?''

''அவ பொண்ணா மிஸ் ஜெயந்தி?''

''உண்மைதான். உங்கவரைல அவ தப்பா ட்ரை பண்ணிட்டா. ஆமா... அவ நேர்மையா ஐ லவ் யூ சொல்லியிருந்தா ஓ.கே. சொல்லியிருப்பீங்களா தனா?''

''இப்ப நீங்க என்னை டெஸ்ட் பண்றீங்களா மேடம்?''

''இல்ல தனா... ஒரு க்யூரியாசிடி. அதான் கேட்டேன்.''

''நிச்சயமா சொல்லியிருக்க மாட்டேன் மேடம்.''

''ஏன்?''

''எப்பவும் காதல்ல ஆண்தான் முதல்ல ஐ லவ் யூ சொல்லணும். ஒரு பொண்ணு சொல்லக் கூடாது சொல்லவே கூடாது.''



''என்ன இது... பெக்கூலியரா...?

''பெக்கூலியர்தான். என்வரைல காதலிச்சாலும் காதலை சொல்ல முடியாத அளவு வெக்கத்துலையும், பயத்துலையும் தவிக்கறவதான் நல்ல பெண்.''

''தயவுசெய்து இந்த கருத்தை வெளியே சொல்லாதீங்க. வெட்கம் பயம்லாம் பெண்களைப் பூட்டி வைக்க இந்த சமுதாயம் பயன்படுத்தற ஆயுதங்கள்னு ஒரு கருத்து இருக்கு தெரியுமா?''

''இருக்கட்டுமே... அது நல்லதுதானே? தங்கத்தையும், வைரத்தையும் பூட்டித்தானே வைப்போம் - அதுதானே அதுக்கு பாதுகாப்பு?''

''அதை சிறைன்னுல்ல முற்போக்குவாதிகள் சொல்றாங்க.''

''பாவம் அவங்க. பெண்ணியம் பற்றி தெளிவில்லாம பேசறாங்க. அவங்களை விட்டுத்தள்ளுங்க.''

''அப்ப பெண்ணியம் பத்தின உங்க தெளிவான கருத்து?''

''உலகத்துல பெண்தான் உன்னதமான ஆத்மா. மனிதப் பிறப்புலையே அவதான் டாப். அன்பு, பாசம், கருணை இதெல்லாம் அவகிட்ட இருந்துதான் உற்பத்தி ஆகுது. பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் இதுக்கும் அவதான் இலக்கணம். இதெல்லாம் இல்லாத - ஒரு ஆணைப்போன்ற மனோபாவம் கொண்ட - பெண்ணை யாராலையும் விரும்ப முடியாது.''

''ஏன்னா அப்பதான் அவளை அடுப்படி பூனையாவே வெச்சிருக்க முடியும். அதனாலதானே?''

''தப்பு மேடம். இந்த நாட்டுல அடுப்படி பூனைகள் ரொம்ப ரொம்ப குறைவு மேடம். அடுப்படி ராணிகள்தான் அதிகம்கறது என் கருத்து.''

''இதென்ன புதுக்கதை?''

''கதை இல்லை. நான் சொல்றதுதான் உண்மை. பெண்ணுக்கு மயங்காத ஆண் இல்லை. அவ அரவணைப்பை பொக்கிஷமா நினைக்காத ஆணும் இந்த உலகத்துல இல்லை.

எங்கையோ சில இடங்கள்ல வேனும்னா பெண்ண
கொடுமைப்படுத்தற ஆண்கள் இருக்கலாம். அதுவும்
அறியாமையால. அது விதிவிலக்கு. ஆனா, பல
இடங்கள்ல பெண்தான் எல்லாத்தையும் தீர்மானிக்கறா

மந்திரத்திலையே காயத்ரி மந்திரத்துக்குதான் சக்தி
அதிகம்னு வேதம் சொல்லுது. ஆனா பிராக்டிகல்
லைஃப்ல தலையணை மந்திரத்துக்கு தான் சக்தி
அதிகம்கறது என்னோட கருத்து...''

''இதெல்லாம் சும்மா... மேடைப் பிரசங்கம்!

ஒரு ஆண் பொண்டாட்டி செத்த பத்தாவது நாள்
இன்னொருகல்யாணம் பண்ணிக்கலாம். பண்ணிக்கவும்
செய்யறாங்க. ஆனா பெண்ணுக்கு அது சுலபமா? அவ
வெள்ளைப்புடவையோட தானே வாழ்ந்தாகணும்.''

''நல்லகேள்வி மேடம். ஆனா இதுல நீங்க பாக்கற
கோணம்தான் ரொம்ப தப்பா இருக்கு. பொண்டாட்டி
செத்த பத்தாவது நாளே இன்னொரு பெண்ணை
தேட்றான்னா பெண்ணைத் தவிர்த்துட்டு ஒரு ஆணால
வாழ முடியலைங்கறதுதானே உண்மை? வெள்ளைப்
புடவையோட ஒரு பொண்ணு இருக்கான்னா உண்மை
யில அதுல எவ்வளவு பெரிய விஷயம்? ஆனால்
முடியாதது பெண்ணால முடியும்கறதுதானே அது
ஒளிஞ்சிருக்கற உண்மை.''

''இல்ல தனா... இது சாமர்த்யவாதம். அவளுக்கும்
ஆசாபாசம் உண்டுதானே? அவமட்டும் விரதம்
இருக்கணும். ஆனா ஆண் மட்டும் ஜாலியா
இருக்கணுமா?''

''கொடி கொம்பைக் கேட்கறது ரொம்ப சகஜம்
மேடம். மரத்துக்கு எதுக்கு கொம்பு?''

''அப்ப ஆண் கொடி மாதிரி - பெண் மரம் மாதிரியா?''

''நிச்சயமா... கொம்பில்லாம கொடி படரவே
முடியாது. ஆனா மரம் அப்படி இல்ல. மரம் கொடியோட
போட்டிபோட நினைக்கக்கூடாது. எவ்வளவு உயரமா
மேடைல நின்னு பேசினாலும் சரி, எவ்வளவு கத்தி
பேசினாலும் சரி எந்த நாளும் பெண் ஆணாக முடியாது



ஆணைப் போல ஆகவும் கூடாது. ஆனா ஒரு ஆண் பெண்ணாக முயற்சி செய்யலாம். அது அவனுக்கு பெருமை சேர்க்கும்.''

''ஆண் பெண்ணாகறது பெருமை சேர்க்குமா?''

''பெண்ணாகறதுன்னா உருவத்துல சொல்லல. மனசுல சொன்னேன். உள்ளத்துல தாயுள்ளம்தானே எப்பவும் பெரிசு. ஒழுக்கத்துல் கற்புதானே எப்பவும் பெரிசு. இதையெல்லாம் ஆண், பெண்கள்கிட்ட இருந்து எடுத்துக்கணும்.

ஆனா ஒரு பெண் ஆண்கிட்ட இருந்து எடுத்துக்க எதுவுமே இல்லை. அவன் சிகரெட் பிடிக்கறதையும், செகண்ட் ஷோ சினிமா பாக்கறதையும், குடிச்சுட்டு கும்மாளம் போட்றதையும் ஒரு பொண்ணு சுதந்திரம் - சம உரிமைங்கற பேர்ல காபி அடிச்சா அந்த பொண்ணுக்காக நான் பரிதாபம்தான் படுவேன்.''

தனா தேர்ந்த சிந்தனையாளன்போல பேசியதைக் கேட்டு வியந்து போன ஜெயந்தியின் உள்ளத்தில் அடுத்த க்ஷணமே 'ஐ லவ் யூ தனா...' என்கிற குரல் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. ஆனால் அவன் சொன்னது போல அதை அத்தனை சுலபத்தில் சொல்ல முடியவில்லை.

எங்கே தன்னையும் அந்த பெண்ணைப்போல வெளியே போகச் சொல்லிவிடுவானோ என்று பயந்தாள். அந்த பயத்தோடு தவித்தாள். தினம் தினம் அந்த தவிப்போடு அவனைக் காண வந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்த 'ஐ லவ் யூ'வை மட்டும் தனா சொல்லவே யில்லை.

நல்லவேளை ராதாம்மாவால் அதற்கு ஒரு நாள் வழிபிறந்தது.

''ஏம்பா தனா... தினம் ஒரு பொண்ணு உன்னைப் பாக்க வருதே. அவளை நீ கல்யாணம் பண்ணிக்கப் போறியா என்ன?'' ராதாம்மா பட்டென்று போட்டு உடைக்கிற மாதிரி கேட்டுவிட்டாள்.

''என்னக்கா நீங்க... பாக்க வந்தா அதுக்கு பேர் காதலா...?''

''அப்பஅதுக்குபேர்என்ன...ஃப்ரெண்ட்ஷிப்பா?''

''கரெக்ட். அது நல்ல பொண்ணு. ஒரு நல்ல சினேகிதி.''

''ஒருஆணும்பொண்ணும்பருவ வயசுல சினேகமா இருக்க முடியும்னு நினைக்கறே நீ?''

''ஏன் முடியாது?''

''நான்நம்பமாட்டேன்.''

''அட என்னக்கா நீங்க. எந்தக்காலத்துல இருக்கீங்க?''

''ஹைடெக் யுகம் இது. தெரியும்! ஆனா ஸ்பேஸ்ல போய்குடும்பம்நடத்தறகாலமேகூட வரட்டுமே. வயசுப் பொண்ணும், பையனும்நல்லசினேகத்தோட இருக்கவே முடியாது.''

''எவ்வளவு பேர் இருக்காங்க தெரியுமா?''

''மூக்குச்சப்பையா, நொண்டிக்காலோட வேணா இருக்கலாம். அழகா இரண்டுபேர் இருக்கும்போது சாத்யமில்லைன்னு சொல்றேன்நான்.''

''நாங்க இருக்கோமே...''

''நான்அந்த பெண்கிட்ட கேட்கட்டுமா?'' ராதாக்கா அப்படிக் கேட்டதுதான் தாமதம். ''வேண்டாம் வேண்டாம்,'' என்றுஅலறினான்தனா.

''ஏன்?''

''வேண்டாம்னாவிட்டுடுங்க. இது என்னவேண்டாத ஆராய்ச்சியெல்லாம்பண்ணிகிட்டு.''

''நான் பண்ணலை. தெரு பண்ணுது.''

''தெருவுக்கு வேறபொழப்பென்ன. அதை எல்லாம் கேர்பண்ணக்கூடாது.''

''ஒரு சொஸைட்டில குடி இருந்துகிட்டு அப்படி எல்லாம்இருக்க முடியாது. இருக்கவும்கூடாதுதனா...''

''தப்புத்தப்பா திங்க் பண்ற சொஸைட்டி நமக்கு எதுக்குக்கா?''

''அப்ப காட்டுக்கு போய் மிருகங்களோடதான் வாழணும். ரெடியாநீ?''

ராதாக்கா அழகாக மடக்கினாள். அப்புறமாய் சிரித்தாள். பிறகு ''டேய்! உன்னை எனக்குத் தெரியுண்டா...'' என்றாள்.



''என்னக்காசொல்றீங்க?''

''அவ ரொம்ப நல்ல பொண்ணுடா.''

''நான் இல்லேங்கலையே...''

''அப்புறம் என்ன?''

''அப்புறம் என்னன்னா...?''

''என்னடா... என் வாயால உன் மனசபடிச்சுச்சொல்லச் சொல்றியா...?''

''மனசைப் படிக்கற அளவுக்கு உங்களுக்கு சக்தி இருக்கா...?''

''பொம்பள எப்பவும் அதுல முதல்ல இருப்பா... அதுலையும் நீ யாருக்கும் தெரியக் கூடாதுன்னு - ஏன் உனக்குக்கூட தெரியக்கூடாதுன்னு எழுதிவெச்சிருக்கற பக்கங்களை படிக்கறதுல நான் கில்லாடி தெரியுமா?''

''நான் அப்படி எல்லாம் எதுவும் எழுதி வைக்கலக்கா.''

''ரகசிய ஆசைகள் இல்லாத மனுஷன் உலகத்துலையே கிடையாது தெரியுமா?''

''அப்படின்னா உங்களோட ஆசை என்னன்னு சொல்லுங்களேன்.''

''பேச்சை மாத்தாதே... இப்ப நான் உன்னையும், ஜெயந்தியையும் பத்தி பேசிகிட்டிருக்கேன்...''

''சரி... விஷயத்துக்கு வாங்க''

''நீ அவளை லவ் பண்றேன்னு சொல்றேன்...''

''அக்கா...''

''ஆமாம் - இல்லை - இதைத்தான் நீ பதிலா சொல்லணும்.''

ராதாக்காஅவனைஅழகாககார்னரில்கொண்டுவந்து நிறுத்தினாள். அவன் அதைக்கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தான். சிரிப்பா அது...? அதில் சொல்ல முடியாத அளவுக்கு அர்த்தங்கள்.

''இப்படியெல்லாம் சிரிச்சா இல்லேன்னு ஆயிடாது தெரிஞ்சுக்க.''

''அக்கா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியலைன்னு நினைக்கறேன்.''

''என்னடாஅந்த விஷயம்?''

''ஊட்டி, கொடைக்கானல்லாம் ரொம்ப அழகுதானே?''

''யார்இல்லேன்னா?''

''எல்லாருக்கும் ரொம்பபிடிக்கும்தானே?''

''விஷயத்துக்கு வா... பிடிக்கும்.''

''பிடிக்கறதாலஅதை நாமவாங்கிட முடியுமாக்கா?''

''அப்பஅவளும் அந்த மாதிரியா?''

''ஆமாம்கா... ஜெயந்தி ஒரு பணக்கார பவழம்கா. பாத்து ரசிக்கலாம். சொந்தம் கொண்டாட நினைச்சா அவ்வளவுதான்.''

''ஊட்டி, கொடைக்கானலை வாங்க முடியாதுதான். ஆனா அங்க நமக்கு ஒரு பிளாட் வாங்க முடியும். ஒத்துக்கிறியாநீ.''

''அதைத்தான்நட்புங்கறபேர்லவாங்கிட்டேனே...''

''காதல்ங்கறபேர்ல வாங்குடான்னு சொல்றேன்.''

''முடியாதுக்கா. எனக்கு அதுக்கு தகுதியே கிடையாது.''

'''நான் ஒரு அனாதை; எனக்கு தகுதி இல்லே'ன்னு சொல்றியா?''

''ஆமாம். யார் இருக்கா எனக்கு...? அவளுக்கு ஒரு நல்லபுடவை வாங்கிக்கொடுக்கக்கூட நான்மூணுமாசம் கஷ்டப்படணும்கா. உங்களுக்கே இரண்டு மாசமா வாடகை பாக்கி.''

''அதை விடு... உனக்கு நான் இருக்கேன். இன்னியில இருந்து நான் உன்கூடப் பிறந்த அக்கா...''

- ராதா அவன் கண்களை பனிக்க வைத்தாள்.

''அக்கா...'' - அவனும் பரவசப்பட்டான்.

''இப்பதகுதி வந்துடிச்சா உனக்கு?''

''டாடா, பிர்லாவே என்னை தங்களோட மகன்னு டிக்ளேர்பண்ணாலும் அவளைக்கல்யாணம் பண்றதகுதி எனக்கு வராதுக்கா...''

''இவ்வளவுதாழ்வு மனப்பான்மையா உனக்கு?''

''உண்மையைச் சொன்னா... தாழ்வு மனப்பான்மைன்னு சொல்றீங்களே...''

''இது உண்மை இல்ல... ஒரு பொண்ணு மனசைத்



தாண்டா பாப்பா. காசு, பணம், அந்தஸ்து அவளுக்கு இரண்டாவதுதான்.''

''சரி... எதுக்காக எங்க விஷயத்துல இவ்வளவு அக்கறை எடுத்துக்கறீங்க...''

''எனக்கு அந்த உரிமை இல்லையா...?''

''நிறைய இருக்கு. உங்களுக்கு ஒரு மகள் இருந்தா சொல்லுங்க. நான் அவளைக்கட்டிக்கறேன். ஜெயந்தியை நான் நினைக்கறதே தப்பு. அவ மகாராணி.''

''சரி என் மகளையே உனக்கு கல்யாணம் பண்ணித்தரேன் - போதுமா?''

- ராதாம்மாள் இறுதியாக ஒருபோடுபோட்டாள்.

''அக்கா...''

''என்ன அக்கா... எனக்கு மகள் கிடையாது. பள்ளிக்கூடம் போற வயசுல பசங்கதான்னு நினைச்சுகிட்டிருக்கியா?''

''பின்ன...''

''இப்ப எனக்கு ஒரு மகள் இருக்கா தெரியுமா?''

''யார்அது எனக்குத் தெரியாம?''

''அதெல்லாம் பிறகு... நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்குவேதானே?''

''உங்க மகள்னா நான் தயார்தான். ஆனா மகள்தான் இல்லையே...''

''பொறுதம்பி பொறு... அம்மா ஜெயந்தி! கொஞ்சம் வெளிய வர்றியா?''

- ராதாம்மா அப்படி அழைப்பாள் என்றோ அதைக்கேட்டு அங்கிருந்து ஜெயந்தி வெளிப்படுவாள் என்றோ தனாதுளிகூட எதிர்பார்க்கவில்லை.

தடுமாறிப்போய் அவளை வெறித்தான்.

அந்த மயிலும் தலையைக் குனிந்துகொண்டு நின்றது.

''மேடம் நீங்களா...?''

''அறைவேன். ஜெயந்தி நீயான்னு உரிமையாக் கேளு.''

''என்னக்கா இது நாடகம்?''

''என்ன பண்ணச் சொல்ற... உன் வாயால ஐ லவ் யூ ஜெயந்தின்னு சொல்வேன்னு எதிர்பார்த்தேன். நீ

விடாக்கஷ்டன் கொடாக்கண்டனா இருக்கே. ஆட்ற மாட்டை ஆடித்தானே கறக்கனும்.''

''மேடம் வேண்டாம்... இது சரிப்பட்டு வராது.''

- அவன் அவளிடமே பேசத் தொடங்கினான்.

''எது?''

''என்ன கேள்வி இது... உங்க செயல் தமிழ் சினிமா ஹீரோயின் செயல் மாதிரி இருக்கு.''

''எல்லா ஹீரோயின்களுமே இப்படித்தான் நடந்துக்கு வாங்க. ஏன் உங்களுக்கு இவ்வளவு காம்ப்ளக்ஸ்?''

''காம்ப்ளக்ஸ் இல்ல... நான் எதார்த்தத்தை பேசறேன். உங்க அப்பாவுக்கு தெரிஞ்சா அவர் துடிச்சுப் போயிடுவார்.''

''முதல்ல என் துடிப்புக்கு பதிலை சொல்லுங்க. அவரை சமாளிக்க எனக்குத் தெரியும்.''

''மேடம்...''

''ஜெயந்தின்னு கூப்பிடுங்க தனா...''

''அது வந்து...''

''டேய்... அதிர்ஷ்டம் வாழ்க்கைல ஒரு தடவை தாண்டா கதவைத் தட்டும். புரிஞ்சுகோடா. அவகிட்ட காசு, பணம்கற சொத்து இருந்தா உன்கிட்ட அழியாத கலைங்கற சொத்து இருக்கு. எப்பவும் சரஸ்வதியும், லட்சுமியும் ஒண்ணாச் சேரும் நல்ல விஷயம் மட்டும் நடக்கவே மாட்டேங்குது. இங்கையாவது நடக்கட்டும்.

- ராதா இருவருக்கும் இடையில் எஞ்ஜினையும் பெட்டியையும் இணைத்து வைக்கும் லைன்மேன் போல இருந்து இருவர் கைகளையும் இணைத்து வைத்தாள்.

அந்த நொடி ஜெயந்திக்கு பனிமலை உச்சியில்களுக கிற மாதிரிதான் இருந்தது. அதன்பின் எவ்வளவோ சந்திப்புகள் - அன்புப் பரிவர்த்தனைகள்!

அதற்கு அருணாசலம் போட்ட முட்டுக்கட்டைகள் அதை ஜெயந்தியும் அழகாக சமாளித்தாள்.

''உன் காதலை என்னால ஒத்துக்க முடியாது...'' அருணாசலம் ஒருநாள் மகளிடம் சொல்லி வருத்தப் பட்டார்.



''எந்த அப்பா இந்த உலகத்துல காதலுக்கு எடுத்த எடுப்புல பச்சைக்கொடி காட்டியிருக்கார் - நீங்க காட்றதுக்கு?'' - அவள் திருப்பிக் கேட்டாள்.

''தெரியுதுல்ல... அவனை மறந்துடு...''

''வேண்டாம்பா. உங்களைப்போல ஒரு அப்பாவும், என்னைப்போல ஒரு பெண்ணும் இந்த மாதிரி சிச்சுவேஷன்ல என்ன பேசுவாங்கன்னு எல்லாருக்கும் தெரியும். அனாவசியமா டயலாக்கை வேஸ்ட் பண்ணாதீங்க. எங்களைப் பிரிக்க நினைக்காதீங்க. என் காதலோட ஆழத்தை உங்களுக்கு ஒரு செகண்டுல புரிய வைக்கறேன். அப்பவாவது உங்க மனசு மாறுதான்னு பாக்கறேன்.''

- என்ற ஜெயந்தி அந்த ஒரு செகண்டில் செய்த செயல் அவரை அப்படியே ஸ்தம்பிக்க வைத்துவிட்டது.

அவள் ஆப்பிள் நறுக்க வைத்திருந்த கத்தி ஒன்றை அருகே இருந்து எடுத்தாள்.

''ஜெயந்தி...'' - அவர் அலறலோடு தடுப்பதற்குள் அதால் தன் சுண்டு விரலை ஒரு வெட்டு வெட்டி தனித்து விழுந்த அதை எடுத்து அவர் எதிரே நீட்டினாள்.

அருணாச்சலம் சிலையாகிவிட்டார். அதன்பின் அவளிடம் அவளது காதலுக்கு எதிராக ஒரு வார்த்தை பேசவில்லை.

''ஓ.கேம்மா... உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம். இனி தனாதான் என் மாப்பிள்ளை. போதும்மா... இனிமே என்னை இப்படி எல்லாம் சித்ரவதை பண்ணாதே'' - என்று அவளை டாக்டரிடம் தூக்கிக் கொண்டு ஓடினார்.

எப்படியோ எல்லா மலைகளையும் கடந்தாயிற்று. இனி ஒரு சிக்கலுமில்லை என்று நினைக்கும்போது தனா ஏன் ஒரு மாதிரி பேசுகிறான்?

படுக்கையில் ஜெயந்தி பழைய நினைவுகளில் இருந்து மீண்டு வந்து கேள்வியில் விழுந்தாள். ஜன்னல் கர்ட்டனை விலக்கி அவள் யோசிப்பதை அருணாசலம் பார்த்துக்கொண்டேதான் இருந்தார்.

'விரலை வெட்டிகிட்டா என்னை வழிக்கு கொண்டுவர நினைச்சே...? அவனையே வெட்டிவிட்டு உன்னை என்

வழிக்கு வரவழைக்கறேன் பார்...'

அவரது குரூரமுகத்தில்-அவர்ஆடத்தொடங்கிவிட்ட சதுரங்க விளையாட்டில் வெற்றிகரமாக ஒரு காயை நகர்த்திவிட்ட வெற்றிக்கான-புன்னகை!

## 8

வயநாடு

கேரளத்தின் அடர்ந்த மலைப்பகுதி! பச்சைக் கம்பளத்தில் கருப்பாக கோடு இழுத்த மாதிரியான தார்ச் சாலையில் சீறிக்கொண்டிருந்தது ஒரு பணக்கார சியலோ கார். உள்ளே விரல் பருமனுக்கு தங்கக் கழுத்துச் சங்கிலியோடு பரசுராமன்பிள்ளை.

கேரளத்தின் நம்பர் ஒன் மரவியாபாரி.

மாத டர்ன் ஓவர் மட்டுமே ஐந்து கோடி! அந்தமான், பர்மா, மலேசியாவில்எல்லாம் கிளைகள். எல்லா இடங்களிலும் ரவுடிப்பட்டாளம் - அவர்களைக் கொண்டு மரக் கடத்தல். அதனால் ஆளும்கட்சி எதுவோ அதுவே அவர் சார்ந்திருக்கும் கட்சியும் கூட....

இப்படிப்பட்டவருக்கு இவரது மனைவி பார்வதியே சிக்கலாக அமைந்ததுதான் விதி. பார்வதி நிறைய தர்ம நியாயம் பேசினாள்.

மரங்களும் மனிதர்களைப்போலத்தான். அவைகளை வெட்டாதீர்கள். அது பஞ்சமா பாதகம் என்றாள். அவர் கண்டுகொள்ளவில்லை. கருத்துவேற்றுமையும் வளர்ந்து கொண்டே போனது. இதற்கு நடுவில் கருத்தரித்து பிள்ளையும் வயிற்றில் வந்துவிட்டது.

ஒரு நாள் கருத்து வேற்றுமையின் உச்சமாக ஒரு மரக்கடத்தலை போலீசுக்கு, போட்டுக் கொடுத்து விட்டாள்.

பரசுராமன் பிள்ளைக்கு வந்தது கோபம். சீறிக் கழுத்தைப் பிடித்ததில் அவள் மூச்சே நின்று விட்டது.

வயிற்றில் ஆறுமாசச் சிசுவோடு பார்வதி அவர் கையாலேயே உயிரை விட்டாள். இதை பரசுராமன்



பிள்ளை எதிர்பார்க்கவில்லை. இருந்தும் சமாளித்து அவளுக்குஹார்ட்அட்டாக்என்று இட்டுக்கட்டி அவர்கள் சம்பிரதாயப்படி அவரது எஸ்டேட் தோட்டத்திலேயே போட்டு புதைத்தும் விட்டார்.

ஒரு அன்றாட எதிர்ப்புக்கு சமாதி கட்டியதாகத்தான் நினைத்தார். ஆனால் அப்புறம்தான் விபரீதம் ஆரம்பமாயிற்று.

பார்வதியை, மரம் வெட்டப்போன இடங்களில் எல்லாம் பார்த்ததாக அவரது மொட்டைத்தலை ரவுடிகள் ஓடிவந்து சொன்னார்கள்.

செத்துப் புதைக்கப்பட்டவள் திரும்ப வருவதா?

அதிர்ந்து போனார் பரசுராமன் பிள்ளை.

''என்னங்கடா... கதை உட்றீங்களா?''- என்று கேட்டு அவர்களை, நம்பாதவருக்கு காத்திருந்தது அடுத்த அதிர்ச்சி.

பார்வதி அவரை எப்பொழுதும் ''பரா...'' என்றுதான் அழைப்பாள். அப்படி யாரோ அவரை அடிக்கடி அழைப்பது போல ஒரு பிரமைதட்டிற்று. ஒரு நாள் டெண்டர் எடுத்த மலைக்காட்டுப்பக்கம் போய்விட்டு திரும்பி வரும்போது அடர்ந்த அந்த காட்டில் ஒரு ராட்சஸ மரத்தடியில் ஒரு பெண் ஒரு குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருக்கும் காட்சி கண்ணில்பட்டது.

காரை நிறுத்திவிட்டு ''யாரது?'' என்று அதட்டலாக கூப்பிட்டார். அவளும் நிமிர்ந்து பார்த்தாள். தூக்கி வாரிப் போட்டது. பார்வதிதான் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''ஏய்ய்ய்...'' அதிர்ச்சியில் அவரது வாய்கிட்டிக்கொள்ள எப்பொழுதாவது அவரை வந்து கவ்வும் காக்காய் வலிப்பு வந்து ஒரே கவ்வாக கவ்விவிட்டது.

கூடவே இருந்தவர்கள் அவருக்கு இரும்பைக் கொடுத்து ஆசுவாசப்படுத்திவிட்டு மரத்தடிக்குப் போய்ப்பார்த்தால் அங்கே யாரும் இருந்ததற்கான தடயமே இல்லை.

அவ்வளவுதான்!

பயமும் குழப்பமும் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது.

எல்லாம் பிரமை... கற்பனை என்று ஒரு கோஷ்டியும் - கொலை செய்யப்பட்டவள் திரும்ப வந்து பழி வாங்க ஆரம்பித்துவிட்டதாக இன்னொரு கோஷ்டியும் சொன்னது.

கடைசியில் 'இந்த மாதிரி இக்கட்டுகளை சமாளிக்கத் தான் அவதாரமே எடுத்திருக்கிறார் அச்சுதன் நம்பூதிரி என்கிற மாந்திரீகர்' என்று அவரது விலாசத்தைக் கொடுத்தார்கள்.

அவரைப்போய் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக் கிறார் பரசுராமன் பிள்ளை. போகும் வழியில் கைக்குழந்தையோடு யாராவது போனால் அவர்களைப் பார்க்கக்கூட அவருக்கு பயமாக இருக்கிறது. இத்தனைக் கும் மனித உயிர்களை ஆடு, மாடு, கோழி கணக்காக வெட்டிய வீழ்த்திய வீர புருஷர்தான் அவர்.

இப்போது மரவட்டைபோல மனசு சுருண்டுவிட, பயப்பிரதேசத்தில் தனித்துவிடப்பட்ட மாதிரி ஒரு உணர்ச்சியுடன் தடுமாறிக் கொண்டிருக்கிறார்.

காருக்குள் அவருக்கு பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு அவருக்கு தைரியம் சொல்லிக் கொண்டிருந் தான் சங்கரன்குட்டி.

"முதலாளி பேடிக்கண்டா... அச்சுதன் நம்பூதிரி ஒரு வல்லிய மாந்திரீகர். மாகாளியே அவருக்கு பிரசன்னமாகி வரமெல்லாம் தந்துருக்கா..." என்று அவர் பெருமையையே சொல்லிக் கொண்டு வந்தான்.

காரும் அவரது ஆஸ்ரமக் குடிசை முன்னால் ஒதுங்கி நின்றது. அவரது காருக்கு முன்னால் ஏகப்பட்ட கார்கள்.

அவரைப்போல பல பரசுராம பிள்ளைகள் நம்பூதிரியை பார்க்க வந்திருப்பது பிள்ளைக்கு புரிந்துபோயிற்று.

எங்கே போனாலும் காத்திருக்கப் பிடிக்காத ஒரு குணம் அவருக்கு. வந்த இடத்தில் கூட்டத்தைப் பார்க்கவும் நெருடியது.

"எடோய் சங்கரா... எந்தா இது? நிறைய்ய கூட்டம் இருக்குபோல தெரியுதே?"



"ஆமாம் முதலாளி... நான் சொல்லலை? நம்பூதிரி ஒரு மகா பண்டிதன். பிரைம்மினிஸ்டரே அப்பாயிண்ட் மெண்ட் கேட்டிருக்கார்னா பாத்துக்குங்க..." என்றான்.

"அப்ப ரொம்ப நேரம் ஆகுமோ?"

"அதான் இல்லை. எத்தனைபேர் வந்திருந்தாலும் நம்பூதிரி யாரைக் கூப்பிட்றாரோ அவர்தான் நம்பூதிரியைப் பாக்க முடியும்."

"அப்ப நா வந்துருக்கறது அவருக்கு தெரியுமா...?"

"பொறுத்து நோக்கணும். உங்களுக்குப் புரியும்" என்றான் சங்கரன்குட்டி. அவன் சொல்லி வாய் மூடவில்லை "ஆரது இவ்விட பரசுராமன் பிள்ளை?" - என்று ஒரு குரல் ஒலித்தது.

"முதலாளி வரணும்... நம்பளத்தான் கூப்பிட் றாங்க..." - என்று அவரை இழுத்துக்கொண்டு நம்பூதிரி யின் அறைக்குள் சென்றான்.

நம்பூதிரி கண்களை மூடிக்கொண்டு ஒரு பலகைமேல் உட்கார்ந்திருந்தார். ஒற்றைநாடி சரீரம். தலையிலும் முன் இழுத்துவிட்ட ஈரமான கருகரு சிண்டு. நெற்றியில் சந்தன குங்குமம். முகத்தில் சொல்லமுடியாதபடி ஒரு தேஜஸ். இடுப்பில் ஒரு பட்டு வேட்டி. அதில் கச்சம் உடுத்தியிருந் தார்.

அவர் எதிரில் ஒரு பலகை. அதில் பரசுராமன் பிள்ளையை உட்காரச் சொல்லி கையை காட்டினார்.

பிள்ளையும் உட்கார சங்கரன்குட்டி ஒட்டி நின்று கொண்டான்.

"எந்தா சம்சயம்... மரிச்சு பார்யை திரும்ப வன்னோ?" -பளிச்சென்று கேட்டார்.

"அதே... அதே..."

"அவள் தெய்வாம்சம் கொண்ட பத்தினி. அவளைக் கொல்லலாமோ?" - ஏதோ பக்கத்தில் இருந்து பார்த்தவரைப் போல கேட்டார்.

"கொல்லலை நம்பூதிரி. அவளுக்கு ஹார்ட் அட்டாக்" பிள்ளை சமாளிக்கப் பார்த்தார். அடுத்த நொடி "எழுந்து போய்க்கோ... கள்ளா" என்கிற கர்ஜனை நம்பூதிரியிடம்.

சங்கரன் குட்டிதான் உடனே சமாளித்தான்.

"நம்பூதிரி ஷமிக்கணும். எண்ட முதலாளிக்கு பேடியாயி. கொலை கேஸ் அது இதுன்னு போயிடும்னு பேடியாயி."

"இப்ப வில்களுக்கு அவளோட ஆவி பயமா? இல்லை ஜெயிலுக்கு போயிடுவோம்கற பயமா?"

"இரண்டும்தான்..."

"எங்கில் அவளது பிரேதத்தை தோண்டி எடுத்து சாந்தி செய்துகுப்புறப்போட்டு புதைக்கணும். அப்படிச் செய்தால் ஆவி நடமாட்டம் மட்டுப்படும். பின்னே போலீசு கோர்ட்டுன்னு பேடிக்கண்டா. ஞங்களுக்கு தூக்காலே மரணமில்லை."

"சந்தோஷம்... நான் எவ்வளவோ பேரை கொலைக் செய்திருக்கேன். ஆனா அவங்கள்ளாம் இப்படி ஆவியா வரலையே நம்பூதிரி அது ஏன்?" - பரசு ராமன்பிள்ளை ஆவி உண்டா என்பதைத்தான் அப்படி நாசூக்காக கேட்கிறார் என்பது நம்பூதிரிக்கு புரிந்தது.

"பரம பவித்ரமான ஆயுளுள்ள சில ஆத்மாக்களுக்கு சில தோஷங்கள் இருந்தால் அந்த தோஷங்களாலதான் அவர்களுக்கு இப்படி கொலை பாதகம் ஏற்படும். அந்த பாதகத்துக்கு பின்னே அவைகள் விடுபட ஆவியாய் அலையும். லட்சத்தில் ஒரு ஆத்மாவுக்கு இப்படி ஆகும். மத்த ஆத்மாக்களுக்கு சக்தி இல்லை. அது கொண்டு அவைகள் சுத்தி வந்தாலும் நாம பயப்பட வேண்டாம். உங்கள் பார்யையோட ஆத்மா ஒரு சுத்தமான புண்ணிய ஆத்மா. பூர்வ ஜென்மத்தில் ஒரு பசுமரிக்க காரணமாயிட்ட காரணத்தால் இ ஜென்மத்தில் நீ அவரைக் கொன்னாய். அது உன் கண்ணில் பட்டு மிரளக்காரணம் உண்டு. இல்லெங்கில் நீ என்னைச் சந்திக்க வந்திருக்கமாட்டாய். என்னாலையே அவளை மோட்சம் சேர்க்க முடியும். இ பிரபஞ்சத்தில் காரணமில்லாமல் எதுவுமே இல்லை பிள்ளை அறிஞ்சோ?"

- நம்பூதிரி சொன்னது பிள்ளைக்கு பாதிபுரிந்தது. மீதி புரியவில்லை. எப்படியோ பிணத்தைத் திருப்பிப்போட்டு



புதைத்தால் பிரச்சினை தீரும் என்கிறார்.

அதையும் தான் பார்ப்போமே?

பரசுராமன் பிள்ளை நம்பூதிரியை நம்பிக்கையோடும் மனதில் சற்று சந்தேகத்தோடும் கும்பிட்டார்.

நம்பூதிரியும் அதை உணர்ந்தவராட்டம் சிரித்துவிட்டு "ஞான் வரும் அமாவாசை அன்னிக்கு அந்தப் பெண்ணிண்ட சமாதிக்கு வரும். அதுவரை அவள் ஸத்ரவம் இல்லாமல் தடுக்க இ குங்குமத்தை தினமும் தரிக்கணும்," - என்று ஆலிலையில் நிறைய குங்குமத்தை வைத்து கட்டிக்கொடுத்தார். பிள்ளையும் வாங்கிக்கொண்டு ஒரு பத்தாயிரம் ரூபாய் நோட்டுக்கட்டை எடுத்து வைத்தார்.

"எடுக்கோ... காரியம் பரிபூரணமாயிட்டு கழிஞ்ச பின்னே ஒரு தர்மஸ்தலத்துக்கு இதை ஞங்கள் கொடுத்தால் மதி..." என்று நம்பூதிரி பிள்ளைக்கு ஒரு ஆச்சரிய அதிர்ச்சியைக்கொடுத்தார்.

பிள்ளை குங்குமத்தை நெற்றியில் தரித்துக்கொண்டு வெளியில் வந்தார்.

செல்போன் சிணுங்கியது. காரில் ஏறியபடியே காதைக் கொடுத்தார்.

"பிள்ளை ஸ்பீக்கிங்."

"எங்க இருக்கீங்க பிள்ளை..."

"வயநாடு நம்பூதிரி ஆஸ்ரமத்துல... என்ன சங்கதி?"

"ஒண்ணுமில்ல... மலேசியன் கோங்குமரம் ஒரு லட்சம் கன அடி வேணும். செங்கோட்டைக்கு நாளைக்கே அனுப்ப முடியுமா?"

"என்ன கேள்வி இது... பத்து லட்சம் கன அடி கூட தேவைப்பட்டா அனுப்பித்தரேன்."

"ஆமா எதுக்கு நம்பூதிரி ஆஸ்ரமத்துக்குல்லாம் போறீங்க. பார்வதி பயமா?"

"ஆமாம்யா... நீ வேற!"

"பிள்ளை... என்னய்யா நீர் வெட்டியா காசைக் கரியாக்கிட்டு ஆவியாவது பூதமாவது? எல்லாம் கப்சாய்யா..."

"அப்படி தெரியில. சில விஷயங்களை பேசக்கூடாது.

அனுபவிச்சாத்தான்தெரியும். நான்அனுபவிக்கறவன்.''

''அப்பநம்பூதிரிதான்இப்போதைக்குஉங்ககடவுளா?''

''ஆமாம்... அப்படித்தான். நான் சொல்லாமலே என் மனசுல இருக்கிறது அந்த் ஆளுக்கு தெரியுது. சம்திங் நமக்கு மேல ஏதோ இருக்கு.''

''பாத்து பிள்ளை... அப்புறமா உங்களால கொலை செய்யப்பட்டவங்க வரிசையா பழிவாங்க வந்துடப் போறாங்க. ஜாக்ரதை!'' - ஒரு கேலிச்சிரிப்போடு மறுமுனையில் செல்போன் முடங்கிக் கொண்டது. ஆனால் பிள்ளைக்குள் பூச்சி பறக்க ஆரம்பித்தது.

## 9

வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நிற்கும் சப்தம் கேட்கவும் எட்டிப்பார்த்தாள் ராதா. ஜெயந்தியும் அருணாச்சலமும் இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஷேவ் செய்து கொண்டிருந்த ராமலிங்கம் கூட அவர்களைப் பார்த்துவிட்டு வேகமானார்.

அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தனர்.

''வாங்க வாங்க...'' - ராதா பரபரப்போடு வரவேற்று சோபாவை காட்டினாள்.

''ஆன்ட்டி இருக்கானா அந்த ஃபூல்?'' - என்று கேஷிவலாக கேட்டபடி ராதாவின் கையைப்பற்றினாள் ஜெயந்தி.

- ராதாவிடம் கலக்கப் பார்வை.

''என்னடா அப்பாவோட வந்துட்டேனேன்னு பாக்கறீங்களா? எப்ப கல்யாணம்... சீக்கிரம் ஒரு முடிவுக்கு வா - தெருவுலகூட எல்லாரும் ஒரு மாதிரி பாக்கறாங்க பேசறாங்கன்னு சொன்னீங்கல்ல - அதான் அப்பாவை கூட்டிகிட்டு வந்துட்டேன். - சொல்லுங்கப்பா...''

- ஜெயந்தி அருணாசலத்தையும் இழுத்தாள்.

''ஆமாம்மா... இவங்களுக்கு கல்யாணத்தை சீக்கிரமா பண்ணி முடிச்சிடலாம்னு இருக்கேன். அதான் உங்ககிட்டையும் சொல்லிட்டு அப்படியே மாப்பிள்ளை



யையும் பாத்துட்டு போகவந்தேன்.'' - அருண்ணாசலம் பேசி முடிக்கவும் ராதாவும், ராமலிங்கமும் மிடறு கட்டி பார்வையால் மோதிக்கொண்டனர்.

''இருங்க வந்துட்றேன். டாடி வந்துருக்கறது அவனுக்கு தெரியவேண்டாம். சஸ்பென்ஸா இருக்கட்டும்...'' - என்று நடுவில் கத்தரித்துக் கொண்டு மாடிக்கு செல்ல காலெடுத்தாள் ஜெயந்தி.

''அம்மாடி கொஞ்சம் இரு...'' தடுக்கப் பார்த்த ராதாவால் முடியவில்லை. அதற்குள் ஒரு புலிப்பாய்ச்சலில் மாடிப்படிகளில் தாவி ஏறத்தொடங்கிவிட்டாள் ஜெயந்தி.

ராதாவிற்கு முகம் மாறிப் போனது. அதை அருணாசலமும் கவனித்தார். ஒரு விதமான மர்மரசனை வந்து அவர் முகத்தில் தேங்கியது.

''உங்களுக்குதான் முதல் பத்திரிகை வைக்கணும்னு நினைச்சுகிட்டிருக்கேன். ஏன்னா நீங்க தானே இவங்க காதலுக்கு போல்ட் நட் போட்டு முடுக்கிவிட்டது...''

- அருணாசலம் அந்த ரசனையோடு பேசி பேச்சில் பாராட்டுவதுபோல ஒரு வித குத்தல்தான் ஒளிந்திருந்தது. ராதா பதிலேதும் சொல்லாமல் மாடிப்படி பக்கம் பார்த்தாள்.

''ஏராதா... சார் என்ன சாப்பிட்றார்னு கேள் மத்த விஷயங்கள பிறகு பேசலாம்,'' - என்று ராமலிங்கம் அவரைப் பார்த்து வழிந்தார்.

இருவர் உடம்பிலுமே பதட்டம் அப்பட்டமாக தெரிந்தது. அருணாசலமும் விடவில்லை.

''ஏன் ஒருமாதிரி நெர்வஸா இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லை:..ஒரு பெரிய மனுஷர் நீங்க வீடுதேடி வந்துருக்கீங்க. அதான் கையும் ஓடலை காலும் ஓடலை.''

''மனுஷனுக்கு மனுஷன் பெரியவன் சின்னவன் என்னவேண்டியிருக்கு. என்வரைல எல்லாரும் ஒண்ணுதான்.''

- அருணாசலம் தன்னடக்கத்தை காட்டியபடி அவரும் மாடிப்படி பக்கம் திரும்பினார். ஏறிய வேகத்தில் ஜெயந்தி இறங்கிக்கொண்டிருந்தாள்.

''என்னம்மா என்ன பண்ணிகிட்டிருக்கார் மாப்ள?''

"உன்னைத்தான்ஜெயந்தி. ஏன் ஒருமாதிரி இருக்கே?" - அருணாசலத்தின் கேள்விக்கு பதில் சொல்லாமல் ஜெயந்தி ராதாவை நெருங்கினாள்.

கண்கள் கலங்கியிருந்தன.

"ஆன்ட்டி..."

"வெரி சாரிம்மா..."

"அந்த பொண்ணு சொல்றதெல்லாம் உண்மையா?"

"அது வந்து..."

"சொல்லுங்க ஆன்ட்டி. தனா வா இப்படி ஒரு வேகமான தப்பைச் செய்தது?"

"ஆமாம்மா... அதை அவனே என்கிட்ட ஒத்துகிட்டான்."

"இல்ல... நான் நம்பமாட்டேன்... நிச்சயமா நம்ப மாட்டேன். அவன் செக்ஸை ஜெயிச்சவன். அதுதான் அவன்கிட்ட எனக்கு பிடிச்ச விஷயமே..."

"நானும் அப்படியெல்லாம் நினைச்சேம்மா. ஆனா தனாவே சாரி ஆன்ட்டி தப்பு பண்ணிட்டேன்னு சொல்லும் போது நான் என்ன பண்ணட்டும்."

"இப்ப எங்க அந்த இடியட்?"

"தெரியலம்மா. அந்த பொண்ணு நேத்துல இருந்து இங்க தான் இருக்கா. இவர்கூட அப்படியே நொறுங்கிப் போயிட்டாரு. அவன் நம்ம மூஞ்சியில நல்லாவே கரியைப் பூசிட்டான் ஜெயந்தி."

"ஆமாம்மா... இதை கேள்விப்பட்டதுல இருந்து எனக்கு கையும் ஓடலை," - ராமலிங்கம் ராதாவுக்கு வக்காலத்து வாங்கினார். நன்றாக பேசட்டும் என்கிற மாதிரி காத்திருந்த அருணாசலம்.

"என்னம்மா பிராப்ளம்... மாப்ள அப்படி என்ன செய்யக்கூடாத தப்பு பண்ணிட்டாரு?" என்று எந்த பதட்டமும் இல்லாமல் கேட்டார்.

"எப்படிப்பா அதை சொல்வேன்... இடியட்... ஸ்டுப்பிட்."

- கோபத்தில் குமுறியபடியே செல்போனை தோளில் தொங்கும் ஹேண்ட் பேக்கில் இருந்து எடுத்தாள்.



வெள்ளை விரல்களால் மளமளவென்று தட்டிவிட்டு காதருகே வைத்தாள். கத்தவும் தொடங்கிவிட்டாள்.

"எங்கடா இருக்கே இடியட்...?"

"சாரி ஜெயந்தி...என்னை மன்னிச்சுடு."

"நேர்ல வாடா... ஏண்டா இப்படி ஒளிஞ்சிக்கறே. உன்மேல நான் எவ்வளவு நம்பிக்கை வெச்சுருந்தேன் இப்படி பண்ணிட்டியேடா..."

"அதான் சாரின்னுட்டேன்ல...?"

"இப்ப நீ வரப்போறியா இல்லையா...? இடியட் ஸ்கௌண்ட்ரல்.

- அவர்கள் எதிரில் ஜெயந்தி குமுறினாள் கொந்தளித் தாள். அருணாசலம் வெடுக்கென்று செல்போனைப் பிடுங்கி பேச ஆரம்பித்தார்.

"மாப்ள என்ன பிராப்ளம்?"

"ஒண்ணுமில்லமாமா...சின்னதா ஒருதப்பு நடந்துடுச்சி. அதை ஜெயந்தி பெரிசு பண்றா... என்னை யார்விட்டா அவளை யார் மாமா கல்யாணம் பண்ணிக்குவாங்க?"

"என்னது... ஜெயந்தியை இனிமே யார் கல்யாணம் பண்ணிக்குவாங்களா...? ஏய் நீ யார் கூட பேசறே தெரியுமா?"

"தெரியும்...ஒரு கோடீஸ்வரர்கிட்டதான் பேசறேன்.... ஒரு விபத்து போல தப்பு நடந்து போச்சு... அது நான் போட்ட ஒரு வேஷம்னு நினையுங்களேன்."

"அடப்பாவி... நீ போட்டது வேஷமா இப்படிச் சொல்ல உனக்கு சங்கடமா இல்லை. இதயம்னு ஒண்ணு உனக்கு இருக்கா இல்லையாடா?"

- அருணாசலம் குரல் அந்த விட்டுக் கூரையையே நடுக்கியது. ராமலிங்கமும் ராதாவும் தர்ம சங்கடத்துடன் நெளிந்தனர்.

ஜெயந்தி கஷ்டப்பட்டு கண்ணீரை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள். இடையில் தடுமாறிக் கொண்டு அருணாசலம் ஹாலில் கிடந்த சோபாவில் விழுந்தார். செல்போன் நழுவிக் கீழே விழுந்தது.

"அப்பா...என்னப்பா ஆச்சு...அப்பா..."

- ஜெயந்தி அப்பாவை நெருங்கி அவரைத் தாங்கிப் பிடித்தாள். ராமலிங்கம் குனிந்து செல்போனை எடுத்தார். அதில் தனாவின் குரல் கேட்டது. காதில் வைத்துக் கேட்க ஆரம்பித்தார்.

"ஹலோ... ஹலோ... என்ன சப்தத்தையே காணோம். ஹார்ட் அட்டாக் வந்துடிச்சா?"

"டேய் இப்ப நீ யார்கிட்ட பேசிகிட்டிருக்கே தெரியுமா?"

"ஓ ராமலிங்கம் அங்க்கிளா. சரிதான் இப்ப ஜெயந்தியும், அவங்கப்பாவும் உங்க வீட்லதான் இருக்காங்களா?"

"ஆமாம்... நீ என்னத்தடா சொன்னே. அவர் அதிர்ச்சியில் கீழ விழுந்துட்டார்டா..."

"அங்க்கிள்... நடந்தது நடந்து போச்சு. பழசை எல்லாம் மறந்துடச் சொல்லுங்க. ராஜேஸ்வரிக்கு ஒரு அமொண்ட்ட கொடுத்தா அவ போயிடுவா. நான் ஏதோ உணர்ச்சி வசப்பட்டு தப்பு பண்ணிட்டேன். அவங்கள சமாதானப் படுத்துங்க அங்க்கிள் ப்ளீஸ்..."

"டேய் தனா... நீ யாடா இப்படி எல்லாம் பேசறே? என்னால நம்ப முடியலடா..."

"நம்ப முடியாத நிறைய விஷயங்கள் நடக்கறதுக்கு பேர் தான் அங்க்கிள் வாழ்க்கை. இதை புரிஞ்சுக்குங்க."

"எனக்கே உபதேசமா? முதல்ல நீ புறப்பட்டு வர்றியா...?"

"சாரி அங்க்கிள்... ராஜேஸ்வரி அந்த வீட்ல இருக்கறவரை நான் அங்க வரமாட்டேன். என்னையும் நீங்க கண்டு பிடிக்க முடியாது. இந்த நிமிஷம் செல்போனையும் டிஸ்கனெக்ட் பண்ணப் போறேன். தொந்தரவு பண்ணாதீங்க.

தயவு செய்த ராஜேஸ்வரியை அனுப்பிடுங்க. அவளை எப்படி சமாளிக்கறதுன்னு எனக்குத் தெரியும். ஆரம்பத்துலையே நான் ஜெயந்திகிட்ட காதல்லாம் சரிபட்டு வராதுன்னு சொன்னேன். அவதான் கேக்கல. இப்பகூட சொல்றேன். என் கேரியர்ல இந்த மாதிரி விஷயங்கள் ரொம்ப சகஜம். ஆகையால் எனக்கும் அவளுக்கும் ஒத்து வராதுன்னு அவ நினைச்சா அவளை



என்னை மறந்துடச் சொல்லுங்க. பை!"

- அவன் பேச்சு உறவு என்று எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தான். ராமலிங்கத்துக்கு எல்லாமே ஒரு சினிமா படக்காட்சி மாதிரிதான் தோன்றியது. செல்போனை பிடித்தபடி ஜெயந்தியையும் அருணாசலத்தையும் பார்த்தார். அருணாசலம் புழுதிக்காற்றில் பறந்து வந்து விழுந்த மாதிரி கலக்கத்தோடு ராமலிங்கத்தை வெறுத்தார். ஜெயந்தியின் விழிகளில் கண்ணீர் கூடு.

"சாரிம்மா நியூயார்க் கட்டிடத்துமேல விமானம் மோதினமாதிரி கம்பீரமா இருந்த உங்க காதல் மேல ஒரு மோதலை காலம் நடத்திடிச்சு. அவன் என்னென்னவோ பேசறான்.

நஷ்டத்துலையும் ஒரு லாபம்னு சொல்வாங்க. அந்த மாதிரி உன் கல்யாணத்து பிறகு இப்படி நடக்காம முன்னையே நடந்ததுக்காக நீ கடவுளுக்கு நன்றி சொல்லணும்."

- என்ற ராமலிங்கமும் அடக்க முடியாமல் கண்ணீர் சிந்தினார்.

ஜெயந்தி ஸ்தம்பித்துப் போயிருந்தாள்.

அவளால் எதையுமே பேச முடியவில்லை.

"சார் நீங்கதான் ஜெயந்தியை சமாதனப்படுத்தணும் நீங்களும் துவண்டுடாதீங்க ப்ளீஸ்..."

- ராமலிங்கம் அருணாசலத்தின் கைகளை தேடிப் பிடித்து உணர்வு பூர்வமாக சொல்லவும் அருணாசலம் பதிலுக்கு ராமலிங்கத்தின் கரத்தை அழுந்தப் பிடித்தார். சுதாரித்துக் கொண்டு எழுந்திருக்கிற மாதிரி பாவலா செய்தவர் சமாளித்துக் கொண்டு நின்றார்.

"இப்படி ஆகும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. முகூர்த்த தேதியெல்லாம் குறிச்சுட்டேன். இப்ப என்ன பண்ணப் போறேன்னு தெரியில..." - என்று நடந்தார்.

ஜெயந்தி அமைதியா பின் தொடர்ந்தாள்.

"ஜெயாம்மா..." - சட்டென்று தனாவின் அழைப்பொலி கேட்டது. வெடுக்கென்று சிலிர்த்து திரும்பிப் பார்த்தாள்.

"என்னம்மா..."

"தனா கூப்ட்டமாதிரி இருந்தது..."

"அவன் எங்க இருக்கான்... பிரமைம்மா. பிரமை. நீ போ..."

- ராமலிங்கம் அருணாசலத்தின் கைகளை தேடிப் பிடித்து உணர்வுபுர்வமாக சொல்வதுதான் உண்மையா?

"அவ இப்படித்தான் நேத்து ராத்திரிகூட சொன்னா... அவன் நினைப்பாலே இருக்கா. எவ்வளவு காதல் இருந்தா இப்படி நடந்துக்குவா? யோசிச்சுப் பாருங்க..."

- என்றபடியே அருணாச்சலமும் காரில் ஏறினார். யூனிஃபார்மில் இருந்த டிரைவர் கதவை அடைத்துவிட்டு வந்து காரைக் கிளப்ப முயன்றான்.

ஜெயந்தி சோகமாக ராதாவையும் ராமலிங்கத்தையும் பார்த்தபடியே கையை ஆட்டினாள்.

"தைரியமா இரு... இதை எல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சு மறக்கப்பாரு. அதுதான் உனக்கும் நல்லது உன் எதிர்காலத்துக்கும் நல்லது."

- ராதா சொல்லும்போது மாடி பால்கனியில் அந்த பெண் ராஜேஸ்வரியும் வந்து நின்று கொண்டு அவர்களைப் பார்த்தாள். அதை கவனித்த ஜெயந்தி "ஆன்ட்டி அந்த பொண்ணை தனா ஏமாத்திடப் போறான். ஜாக்ரதை ஆன்ட்டி" என்றாள்.

"நீ போம்மா நாங்க பாத்துக்கறோம்..." - கார் புறப்பட்டது. அருணாசலம் பால்கனியில் நின்று கொண்டிருந்த பெண்ணுக்கு ரகசியமாக ஒரு சமிக்ஞையை புருவத்தை வளைத்துக் கொடுத்தார்.

அவளும் ஒரு வினாடிக்கும் குறைவான அளவில் கைகட்டை விரலை உயர்த்திக் காட்டிவிட்டு திரும்பினாள்.

## 10

பாலக் காட்டின் பரசுராமன் பிள்ளைத் தோட்டம்! அதில் ஆகாயத்திற்கு ஒட்டடை அடிக்க ஆசைப்படுகிற



மாதிரி தென்னை மரங்கள். அங்கங்கே நீர்த்தாரையான புழாக்கள். அதில் வகிடெடுத்தபடி விரையும் கட்டு மரக்காரர்கள்.

அழகுக்கு இன்னொரு பெயர் கேரளம் என்று சொன்னது சரிதான் என்கிற மாதிரி இருந்தது அந்தச் சூழல் தென்னந்தோகையில் தூக்கணாங்குருவிகள் தங்கள் குஞ்சுகளுக்கு சோறு ஊட்டியபடி சிறகடிப்பது மேலும் ரம்யமாக இருந்தது.

தோட்டத்து மையத்தில் செவ்வாழைக் கன்றுகள் சில ராட்சஸ வளர்ச்சியில் ஒரு பக்கமாய் சாய்ந்த நிலையில் குலை தள்ளியிருந்தன. அந்தக்குலைகளில் கருஞ் சிவப்பில் செவ்வாழைப் பழங்கள் உள்ளங்கை கொள்ளாத அளவில் தடித்திருந்தன.

பார்க்கப் பார்க்க ஆசையாக இருந்தாலும் தோட்டத்தில் யாருமே இல்லை... அங்கும் இங்குமாக கட்டப்பட்டிருக் கும் மாடுகளைக் கூட காணவில்லை.

பரசுராமன் பிள்ளையின் கார் மட்டும் உள்ளே நுழைந்து அதிலிருந்து அவரும் இறங்கினார்.

தோட்டத்தை ஒரு பார்வை பார்த்தார்.

கூடவே சேர்ந்து இறங்கிய சங்கரன்குட்டி

"தோட்டத்தில் யாரும் பணியில் இல்லா. அத்தன பேரும் பேடிச்சு போயி..." - என்படியே பங்களா நோக்கி நடந்தான். பிள்ளையும் இறுகின முகத்துடன் தொடர்ந்து நடந்தார்.

காற்று மட்டும் ஊ ஊ என்று கொஞ்சம் கிறுக்கு பிடித்த மாதிரி வீசிக் கொண்டிருந்தது. அந்தச் சப்தம் உள்ளபடியே சங்கரன்குட்டிக்கு பயத்தைத் தான் தந்தது.

"நாளு பேர் இருக்கும்போது இப்படி காத்து சத்தம் போட்டால் மனசு மிரளாது. ஆனா இப்பப்பாருங்க சின்ன இலை தழை அசையற சத்தம் கூட பேடியா இருக்கு.

உங்கள ஒண்ணும் செய்ய முடியாதந்த பார்வதி இப்ப தோட்டத்துல யாரையும் விட்றதில்லை அவ்வளவு அட்டகாசம்..."

- என்றபடியே பங்களாவின் பூட்டிய கதவை திறந்தான்.

பகீரென்றது!

திறந்துகொண்ட கதவுக்குஅப்பால்ஒருவெட்டப்பட்ட மனிதக் கை! அங்கங்கே கை விரல்கள் சதைப் பிண்டங்கள்... ஹாலில் தொங்கிக் கொண்டிருக்கும் மெத்தை போட்ட ஊஞ்சல் அதுபாட்டும் ஆடிக் கொண்டிருந்தது.

"முதலாளி ஈ... ஈ... ஈ..." - சங்கரன் குட்டிக்கு பற்கள் கிட்டிக்கொண்டன. பரசுராமன்பிள்ளைக்கும் வயிற்றில் அமில்த்தாரைகள்கொப்பளித்தன.

"டேய் சங்கரா எந்தாடா இது..."

"அறியில்லா...எனிக்கு அறியல்லா..." - நடுங்கினான் சங்கரன்குட்டி. பரசுராமன்பிள்ளை ஊஞ்சலை சமீபித்து அதை நிறுத்தினார். பக்கமாய் ஜன்னல். அதன் அருகே சென்றுவெளியே பார்த்தார்.

சரேலென்று ஜன்னல் கம்பிகளுக்கு அந்த பக்கமாய் ஒரு பெண்ணின் முகம் தோன்றி 'ஹி ஹி ஹி..." என்று மகா விகாராமாய் சிரித்தது. பரசுராமன் பிள்ளை மார்பில் உதைபட்டுபின்னேவந்து விழுகின்ற மாதிரி ஊஞ்சலில் வந்து விழுந்தார். சங்கரன் குட்டியும்|அந்த பெண்ணை பார்த்தான்.அவள்தோட்டத்து காவல்காரன்சாக்கோவின் மனைவி பிரேமி.

"முதலாளி அது பிரேமியானு... நம்ப சாக்கோவிண்ட பார்யை..."

"அவள்...அவள் எதுக்குடா அப்படி பாத்து சிரிக்கறா?"

"தெரியல... பார்வதியிண்ட ஜீவன் அவளை ஆக்ரமிச்சிருக்கணும்!" - கேள்வியும் பதிலுமாக அவன் அவளைவெறிக்க அவளும் ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொண்டு கத்தத் தொடங்கினாள்.

"எடோய் சங்கரா... ஞான்பாருக்குட்டியடா... நிண்ட எஜமானி பாருக்குட்டியே தாண்டா..."

"எழுமானே நோக்கியோ... அது ஙுங்கள பார்யா பாருக்குட்டியே இப்ப இங்க வந்திருக்காங்க." - என்றபடியே சங்கரன்குட்டி வெளியே ஓடினான். பரசுராமன்பிள்ளைக்கு நடப்பதெல்லாம் கனவா இல்லை



நிஜமா என்கிற சந்தேகமே வந்துவிட்டது. ஒருபுறம் பயமும் மறுபுறம் ஆவேசமும் கூட்டணி போட்டுக் கொண்டு வந்தது.

ஜன்னலுக்குவெளியில்அந்தப்பெண்கற்சிலைபோல அசையாமல் கண்ணிரண்டையும் கூட ஒரு துணுக்கு அளவு அசைக்காமல் அவரையே பார்த்துக்கொணடிருந் தாள். பரசுராமன் பிள்ளை கண்ணாடி முன்போய் நின்று பார்த்தார். குங்குமம் நெற்றியில் இருந்தது. திரும்பினார் ஒரு அறைக்குள் நுழைந்து பீரோவைத் திறந்த கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தார். ஜன்னலைப் பார்த்தார்.அவளைக்காணவில்லை! எங்கே மறைந்தாள்? அவர் பார்வை துழாவும்போது வாசல் வழியாக உள்ளே ஒரு கையின் துண்டுப் பகுதி வந்து விழுந்தது.அவள்தான்வீசிவிட்டுஓடிக்கொண்டிருந்தாள்.

ஒருஷணம் பிள்ளைக்கு உயிர்க்குலையே நடுங்கி பிரக்ஞைமீளுவதே பெரும்பாடாகிவிட்டது. பெருமூச்சு மார்புச் சட்டையையே சுட்டது. அமாவாசை வரை எப்படிப் பொழுதை விரட்டப் போகிறோம் என்று தோன்றியது.

திடீரென்று சங்கரன்குட்டி குரல்கேட்டது.'முதலாளி... முதலாளி' என்று பயந்துவெளியே ஓடியவன்திரும்பி ஓடி வந்துகொண்டிருந்தான்.

உள்ளே ஜாவலின் த்ரோவின் போது வீசப்பட்டு வந்து விழும் ஈட்டி கணக்காக வந்து தலைக்குப்புற விழுந்தான்.

"சங்கரா...எந்தாடா...?"

"ஆ பெண்குட்டி...பெண்குட்டி"

"அவளுக்குஎன்னடா...?"

"இ பிராந்தியத்திண்டே சுடுகாட்டுப் பக்கம் போய் புதைச்ச சரீரங்களை தோண்டி எடுத்து அந்த மாமிசங்களைத்தான் வீசி எரியறா... நம்ம தோட்டத்துல எங்க பார்த்தாலும் மனிதக் கால்கள் கைகள் முதலாளி!

மொத்த தோட்டமே இடுகாடாட்டம் தெரியுது. தோட்டத்துக் கேணியில நீங்க கொன்னு புதைச்ச மாதவனோட தலை மட்டும் மிதந்து கிட்டிருக்கு..."

- அவறோஅவறு என்று அலறினான் அவன்.

"சங்கரா... நம்பூதிரியை தாமசமின்றி விளிச்சோடா... போ... போ..."

- பதிலுக்கு பிள்ளையும் அலறினார். அவன் தயங்கித்தயங்கி வெளியேறி காரில் ஏறிக்கொண்டான். அதுவும் கிளம்பியது. பிள்ளை அவன் சென்ற மறு நொடி கதவை தாழிட்டுக் கொண்டார்.

'எண்ட தெய்வமே... ஒரு துர்மரணத்துக்கு பின்னே இப்படியெல்லாம் கூடபயங்கரங்கள் உண்டோ?' - என்று வாய்விட்டு புலம்பினார். கைத்துப்பாக்கியை இறுக்கிக் கொண்டார்.

## 11

கல்லூரிக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தாள் ஜெயந்தி. தோளில்ஒயிட்கோட்,கையில் ஸ்டெதாஸ்கோப்.முகத்தில் துளிகூட சந்தோஷமில்லாதே இறுக்கம். அவ்ளைப் பார்த்த அருணாசலம் "காலேஜிக்காம்மா?" என்றார். மௌனமாக தலையை அசைத்தாள்.

"உன் கல்யாணம் பத்தி ஒண்ணுமே சொல்லலை யேம்மா." - அவர் திரும்ப கல்யாணப் பேச்செடுத்தது அவளுக்குள்எரிச்சலைத்தந்தது.

"இனி எனக்கு கல்யாணம்னே ஒண்ணு கிடையாதுப்பா." - என்று விறு விறுவென்று நடந்தாள்.

"நில்லு..." - அவரும் முன்னால் சென்று தடுத்துவிட்டு விரக்தியாகசிரித்தார். அவள் முறைப்பைத்தொடர்ந்தாள்.

"தனா மட்டும் தான் இந்த உலகத்துல ஆண்பிள்ளையா. அவன் இல்லைன்னா வேறு யாருமே கிடையாதா?"

"நான் அப்படிச் சொல்லலையே..."

"அப்ப ஏன் கல்யாணம் வேண்டாம்கறே?"

"பிடிக்கல... நான் இப்ப ஆண்வர்க்கத்தையே வெறுக்கறேன்."

"சாரிஜெயந்தி. இனி நான் உணர்வுகளை மதிக்கறதா இல்லை. உனக்கு ஒரு துணை அவசியம்."



"அதைநான்சொல்லணும்ப்பா..."

"நீ எப்பவமே தப்பு தப்பா யோசிக்கறவ. தப்பு தப்பா முடிவெடுக்கறவ். உன்னைஉன்போக்குலபோகவிட்டா நான்பொறுப்பில்லாதஅப்பனாயிடுவேன்."

"இது ரொம்ப ரொம்ப பூஷீவல் டயலாக்பா. வேற எதையாவது பேசுங்க. எக்ஸப்ட் மை மேரேஜ்."

"இல்ல...உனக்கு இந்தஆறுமாசத்துலநான்கல்யாணம் பண்ணியே தீரணும். விட்டுட்டா அப்புறம் உனக்கு கல்யாணம் நடக்காது."

"ரொம்ப சந்தோஷம் - அதுதான் எனக்கும் வேணும்."

"ஜெயந்தி எதுக்காக இப்படி அடம் பிடிக்கறே? வாழத்தான் வாழ்க்கை - அதைத் தெரிஞ்சுக்கோ..."

"அந்த வாழ்க்கையை கல்யாணமே செய்துக்காமலும் வாழலாம்பா."

"அதுக்கா நான் இவ்வளவு சொத்து சேத்து வெச்சுருக் கேன். எனக்கு பேரன் பேத்திகளை பார்க்கணும்மா."

"அனாதை இல்லத்துல ஆயிரம் குழந்தைகள் இருக்காங்க. அவங்கள அப்படி நினையுங்களேன்."

"வாக்குவாதம் பண்ணாதே ஜெயந்தி. உன் ஆசைப்படி நடக்க நான் சம்மதிச்சேன்ல. நீ ஏன் ஏன் ஆசைப்படி நடந்துக்க மாட்டேங்கறே?"

"கல்யாணம்கற ஒரு விஷயத்தை தவிர மத்த உங்க எல்லா ஆசைகளையும் நான் நிறை வேற்றிவைக்கறேன். என்னன்னு சொல்லுங்க..."

- அவள் விடாப்பிடியாக பேசிவிட்டு அருணாசலத்தை வெறித்தாள். அவர் கைகளைக் குத்திக் கொண்டார்.

"யோசிச்சு பட்டியல் போட்டு வைங்க. இன்னிக்கு எனக்கு ரொம்ப இம்பார்ட்டண்ட் கிலாஸ்."

- அடுத்த நிமிடம் அவளது கார் வெளியேறிவிட்டது.

அருணாசலம் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தார். 'இவளை எப்படி வழிக்கு கொண்டு வருவது?' மனதுக்குள் நிறைய நரிகளை வளர்ப்பவர். அவைகளுக்கும் தந்திரம் அதிகம். பளிச்சென்று ஒரு நரி அவருக்குள் ஊளைவிட்டது. ஹார்ட் அட்டாக் ஆயுதம்

தான் ஒரே தீர்வு என்றது.

அதற்குமுன் அமெரிக்காவில் உள்ள உறவுக்கார மனோஜிற்கு ஒரு போன்.

"ஹலோ மனோஜ்."

"அங்க்கிளா?"

"ஆமாம். உனக்கு இந்தியாவர டிக்கெட் கன்ஃபார்ம் ஆயிடிச்சா...?"

"ஆயிடிச்சு. நாளைக்கு கிளம்பறேன். அங்க பிரச்சினை ஒண்ணுமில்லையே?"

"நத்திங். சத்தமேயல்லாம ஒரு புரட்சியே பண்ணிகிட்டிருக்கேன். நிஜத்துல அந்த தனா செத்துட்டாலும் இந்த ஊரைப் பொறுத்தவரை, ஜெயந்தியை பொறுத்தவரை அவன் உயிரோட தான் இருக்கான். அவனால ஒரு பொண்ணு ஏமாற்றப்பட்டு கைல குழந்தையோட இருக்கா. எல்லாம் என் செட்டப். ஜெயந்தி அதைப் பார்த்து ஆடிப்போயிட்டா. இது நியாயமாடான்னு அந்த தனாகிட்டையே கேட்டு சண்டை போட்டான்னா பாத்துக்கையேன்."

"செத்துட்டவன்கிட்ட எப்படி சண்டைபோட முடியும் அங்க்கிள்."

"செத்துட்டவன்கிட்ட முடியாது. ஆனா அவன் குரல்ல பேசற மிமிக்ரி மணிங்கறவன்கிட்ட சண்டைபோடலாம் இல்லியா?"

"ஓ... அந்த விஷயத்துல அப்படி ஒரு ஏற்பாடா. அப்ப சண்டை டெலிபோன்லையா?"

"ஆமா... நேர்ல பார்த்தா கிழிஞ்சுடாதா உண்மை?"

"அப்ப நான் இந்தியா வந்தா ஜெயந்தி கழுத்துல தாலியைக்கட்ட ஒரு இடைஞ்சலும் இல்லைன்னு சொல்லுங்க."

"இடைஞ்சல் வெளிய இல்லை. ஜெயந்திதான் கல்யாணம் வேண்டாம்னு ஏமாற்றத்தை தாங்கிக்க முடியாம புலம்பிகிட்டு இருக்கா."

"ஒரு நாலு நாளைக்கு அப்படித்தான் இருப்பா அப்புறம் சரியாயிடும் அங்க்கிள்."



"அவ விஷயத்துல அப்படியெல்லாம் ஆகாது மனோஜ். அதுக்கு வேற வழியைதான் பாக்கணும்."

"வேற வழியா...எப்படி?"

"எனக்கு ஹார்ட் அட்டாக். டாட்டர் எனக்கு கெடு விதிக்கறாங்க. அதாவது மூணு மாசம் கூட நான் தாங்கமாட்டேன்னு. நானும் இதுதான் சாக்குன்னு ஜெயந்தி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றேன்.... நீயும் எனக்காக சம்மதிக்கறே..."

"பயங்கரமான ஐடியாவா இருக்கே அங்க்கிள்."

"அட போப்பா... பத்து தமிழ் சினிமால எட்டு சினிமால கதாநாயகியோட அப்பா இதைத்தான் பண்றார். எனக்கும் வேற வழிதெரியல. என்ன பண்றது. ஒரு நாடகம் போட்டாச்சு. அதை முழுசா முடிச்சு மங்களம் பாடினாத் தானே நல்லா இருக்கும்."

"கிரேட் அங்க்கிள்... ஜமாயுங்க!"

"ஹார்ட் அட்டாக்னு சொல்லி கசந்துபோய் படுத்துக் கிடக்கணுமேப்பா - அதை நினைச்சாதான் வெறுப்பா இருக்கு."

"அதுசரி...அனாதைப் பயமாப்பிள்ளையா வரக்கூடாது - சொத்தோட ஒரு எம்.எஸ். படிச்ச நான் மாப்ளையா வரணும்னா நீங்க இந்த கஷ்டம் கூட படலைன்னா எப்படி?"

"பட்றேன்... பட்றேன்... வெச்சுடட்டுமா?"

"ரைட் அங்க்கிள். பை!"

"பை...டொடக்!"

- அருணாசலம் அடுத்த சீனுக்கான திரைக்கதை வசனம் குறித்து யோசிக்க ஆரம்பித்தார்.

மெடிக்கல் காலேஜின் அனாடமி லேபுக்கு வெளியே ஒரு வேப்பமரம். சிங்கத்தின் அடர்த்தியான தலைமுடி போல புசுபுசுவென்று நிழலோடு இருந்த அதன் கீழே தீவு தீவாய் மாணவர்கூட்டம். ஜி.எச்சின் மார்ச்சுவரியில் இருந்து அனாதைப் பிணம் ஒன்று ஸ்ட்ரெச்சரில் மூடிய நிலையில் அந்தக் கட்டத்தின் ஊடே கடத்தப்பட்டுக்

கொண்டிருக்க சப்ஜெக்டில் சிலரும். ஆப்கான் குண்டு வீச்சில் சிலரும் அரட்டையில் இருந்தார்கள். ஜெயந்தியும் அவர்களுக்கு நடுவில் இருந்தபோது அவளது செல்போன் சிணுங்கியது.

காதைக் கொடுத்தவள் முகம் ஷணத்தில் மாறியது.

காலிரண்டிலும் பி.டி. உஷாவின் வேகம் வந்து தொற்றிக்கொள்ள ஓட ஆரம்பித்தாள்.

ஒரு பிரைவேட் நர்சிங்ஹோமின் இன்டென்சில் கேர் யூனிட்!

உள்ளே மூக்கிலும் நாக்கிலும் ட்யூப்களோடு அருணாசலம் படுத்திருந்தார். கதவின் கண்ணாடி தடுப்பு வழியாக பார்க்க முடிந்தது.

ஓடி வந்திருந்த ஜெயந்தியும் பார்த்து விட்டு கைகளை உதறிவிட்டுக் கொள்ள அவளது அத்தையும், மற்ற உறவுகளும் அவளை கைத்தாங்கலாய் பிடித்து அருகில் அமர்த்திக் கொண்டார்கள்.

''உன் கவலைதான் அவனுக்கு... அப்படியே நெஞ்சைப் பிடிச்சுகிட்டு சுருண்டு விழுந்துட்டான் தெரியுமா?'' - அத்தை விசும்பலைக் கலந்தபடி குமுறினாள்.

''ஏம்மா உங்க கல்யாணத்துல எதாவது சிக்கலா?'' - ஒரு உறவுக்காரர் கேட்டார். அருணாச்சலம் உடம்பின் ஆரோக்யத்தைவிட அவர்களுக்கு அதுதான் பெரிதாகப் பட்டது.

''பெரிய்யகல்யாணம். அதவிடுங்க. அப்பா இப்ப எப்படி இருக்கார்...?'' - வெடித்தாள் ஜெயந்தி.

''ரொம்ப சீரியஸ் தானாம்மா. யாரையும் பாக்க விடமாட்டேங்கறாங்க... இருபத்திநாலுமணி நேரம் கிட்டையே வரக்கூடாதுன்னுட்டாங்க...''

- ஜெயந்திக்கு அதைக் கேட்க அழுகை கொப்பளித்தது. சுற்றி இருப்பவர்கள் ஒருமாதிரி பார்ப்பதைப் பற்றி கூட கவலைப்படாமல் அழ ஆரம்பித்தாள். நன்றாக அழட்டும் என்கிறமாதிரி அத்தையும் கொஞ்சம் விலகிக் கொண்டாள்.



''ஜெயம்மா...'' - அவள் காதில் சட்டென்று தனாவின் குரல் கேட்டது. சிலிர்த்தது நிமிர்ந்தாள். அவன் ஒருவேளை செய்தியறிந்து வந்து விட்டானா?

கண்ணீரைத் துடைத்தபடி பார்த்தாள். யாருமில்லை.

''ஜெயம்மா... இதை எல்லாம் நம்பாதே!'' - திரும்பவும் குரல் கேட்டது. தோளில் கைபோட்டு காதை உரசிக் கொண்டு ரகசியம் பேசுவது போல மிகச் சன்னமாய் ஒலித்த அந்த குரல் அவளை திரும்பவும் குழப்பியது.

''யாரது?'' - நாலு பேர் திரும்பிப் பார்க்கும்படியாக பலமாக பதிலுக்கு கேட்டாள். எல்லோரும் எதிர்ப்புடன் அவளைப் பார்த்தனர்.

''யாருன்னு கேக்கறேன்ல...?'' - திரும்ப அவளிடம் சீற்றம்.

''ஜெயந்தி என்னம்மா. எதுக்கு இப்படி கத்தறே?'' - அத்தை நெருங்கி வந்தாள்.

''யாரோ என்னைக் கூப்பிட்றாங்க அத்தை அப்புறமா இதை எல்லாம் நம்பாதேங்கறாங்க...''

''இங்க யாரும் இப்ப உன்னைக் கூப்பிடலையே ஜெயந்தி.''

''இல்ல... இப்ப என் காதுல விழுந்துச்சே...''

''இதோ பார்... நீ ரொம்ப குழம்பிப்போயிருக்கே. கொஞ்சம் அமைதியா இரு. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்னு உடனே உனக்கு மனசளவுல பெரிய அடி விழுந்துடிச்சாட்டம் இருக்கு... அதான்.'' போட்டு குழப்பிக்கறே...''

- அத்தை அவளைச் சமாளித்து அணைத்துக் கொண்டாள்.

உள்ளே டாக்டர் ஒருவர் அருணாசலத்தின் காதருகே கிசுகிசுகுரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''மிஸ்டர் அருணாசலம் உங்க பிளான் சூப்பர் சக்ஸஸ். உங்க டாட்டர் அப்படியே துடிச்சுகிட்டு இருக்காங்க. நிச்சயம் வழிக்கு வந்துடுவாங்க.''

அதைக் கேட்ட அருணாசலம் கண்களில் கூட வெற்றிப் பளபளப்பு!

## 12

அம்மாவாஸை!

அச்சுதன் நம்பூரியின் பிரவேசம் பரசுராமன் பிள்ளை தோட்டத்தில் ஏக அமர்க்களமாய் நிகழ்ந்தது.

கார் உள்ளே நுழையும்போதே மூக்கை உறிஞ்சிக் கொண்டும் புருவத்தை இடுக்கிக் கொண்டும் நம்பூதரி வெளியேபார்த்தபடியேவந்தார்.

தவறாக எதையோ உணர்வதுபோல ஒருதோற்றம்.

அதை கவனித்த பிள்ளை முகத்தில் பீதி. காரும் ஒரு இடத்தில்கிரீச்சிட்டு நின்றது. கார் பானட் முன்னேபிரேமி கையில் ஒரு மட்டக் கோலுடன் நின்று கொண்டு காரை மறித்தாள்.

''நம்பூதிரி... நம்பூதிரி... இவதான் - இவதான் அந்த பிரேமி. பாருக்குட்டி இப்ப இவளுக்குள்ளதான் இருக்காளாம்.''

- பிள்ளை விரல் நீண்டது. நம்பூதிரியின் விழிகள் அவளைதுளைப்பதுபோலபார்த்தது. பின்காதைவிட்டு இறங்கிய நம்பூதிரி அவளை நோக்கி ஒவ்வொரு அடியாகப்போட அவளும் ஒவ்வொருஅடியாகபின்னால் செல்லத்தொடங்கினாள்.

உள்ளிருந்த சங்கரன்குட்டி கதறினான். ''முதலாளி... வழியிலையே இப்படி இவ வந்து மாட்டணுமாக்கும். பாருங்க நம்பூதிரி அவளை என்ன பாடுபடுத்தப் போறார்னு.''

அவன் சொன்னபடி தான் நடந்தது. நம்பூதரி இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்து விபூதியை எடுத்து அவளை நோக்கிஉதட்டுக்காற்றோடுசேர்த்துஊதஅவள்பின்னால் நடப்பதைநிறுத்தினாள்.

நம்பூதிரிஉடனேதிரும்பிப்பார்த்துசங்கரன்குட்டியை வெளியேஅழைத்தார்.

''எந்தா நம்பூதிரி...?''

''இகுட்டியை அந்தபலா மரத்தில் கட்டு...''

''ஐயோ அவளையா... பேடியாயிட்டு இருக்கு



நம்பூதிரி.''

''பேடடிக்காண்டா. அவள்இப்பொழுதுலஇருந்துமூணு நாழிகை ஏதும் செய்யமாட்டா. போ... போய் பிடிச்சு அவளைக்கட்டு.''

- சங்கரன்குட்டியும் அப்படியேசெய்துவிட்டுவந்தான். பின் கார் நேராக சுடுகாட்டுக்குத்தான் போய் நின்றது.

மூவரும் இறங்கினார்கள். உள்ளே நுழைந்தார்கள். வெட்டியான் ஆச்சரியமாய் பார்த்தபடி எதிரில் வந்தான். நம்பூதிரியைப் பார்த்து பெரிதாக முதுகை வளைத்து கும்பிடுபோட்டான்.

''நம்பூதிரிக்கு ஏதாகிலும் சகாயம் செய்யணுமோ?'' - கேட்டான்.

''அதே...''

''எந்தா சகாயம்?''

''ஒரு பிரேதக் குழியை திரும்ப திறக்கணும்.''

''ஏதாகிலும் மந்த்ர காரியமோ?''

''அதே...''

நம்பூதிரி சொல்லச் சொல்ல அவன் தலை ஆடியது. ஓடிப்போய் மண்வெட்டியை எடுத்து வந்தான். சங்கரன் குட்டியும், பிள்ளையும் பார்வதியை புதைத்த குழியை காட்டினைார்கள்.

அதை அரைமணி நேரத்தில் திறந்து விட்டான். உள்ளே பார்வதி மஞ்சள் சேலையில் சுமங்கலிக் கோலத்தில் முகத்துத்தோளெல்லாம் மண திின்று விட்ட நிலையில் அகோரமாக தெரிந்தாள்.

துர்வாடையும் குப்பென்று மூக்கைத் தாக்கியது.

நம்பூதிரி துண்டால் மூக்கை மூடியபடியே வலக்கையை வானைநோக்கி நீட்டி விட்டு கீழிறக்கவும் உள்ளங்கையில் ஒரு எலுமிச்சம்பழம் வந்து சேர்ந்திருந் தது! அதை இருகைக்குள்ளும் வைத்து மூடியபடி குழியை சுற்றி வந்த நம்பூதிரி அந்தபழத்தை நசுக்கிப்பிழிந்து பின் புறமாய் தூக்கி எரிந்துவிட்டு குழியை நோக்கி கையை நீட்டினார்.

சரசரவென்று அவரது உள்ளங்கையில் இருந்து

குங்குமம் கொட்ட ஆரம்பித்தது. பிள்ளையும், சங்கரன்குட்டியும் இமைக்கக்கூட மறந்து அதைப் பார்த்தனர்.

ஒருசிலநொடிக்குபின்குங்குமம்கொட்டுவதுநின்றது. நம்பூதிரி குனிந்து மண் கவளங்களை அள்ளினார். பிள்ளையைஅருகில்அழைத்துஅந்தமண்ணைவாங்கிக் கொள்ளச் சொன்னார். பிள்ளையும் வாங்கிக் கொண்டு நின்றார்.தொடர்ந்துதிருப்பிப் போடச்சொன்னார்.

அவனும் குழிக்குள் இறங்கி பிணத்தை திருப்பிப் போட்டான்.பிறகுபிள்ளையின்கைமண்ணைகுழிக்குள் போடச் சொல்லி நம்பூதிரி சைகை காட்ட பிள்ளையும் மண்ணை குழிக்குள் போட்டார்.

''பிள்ளை... இனி நீதிரும்பிப்பாக்காமல் இபிராந்தியம் விட்டுப் போகணும். எது கொண்டும் திரும்பக்கூடாது.'' என்று கட்டளை பிறப்பிக்க பிள்ளையும் பெரிதாக ஒரு கும்பிடு போட்டு விட்டு நடந்தார்.

நம்பூதிரி சங்கரன்குட்டி பக்கம் திரும்பி ''நீ போய் கட்டிப் போட்ட அப்பெண்மணியை நோக்கு...'' என்றார். சங்கரன்குட்டியும் மந்திரித்த கோழிபோல தலையை உசுப்பிவிட்டு ஓடினான்.

பிள்ளையும் அவனுக்கு முன்னால் நடந்து கொண்டிருந்தார். அவன் அவரைத் தாண்டிக் கொண்டு ஓடி பலா மரத்தடியை நெருங்கினான். பிரேமி என்னும் அந்தப் பெண் அரை மயக்கத்தில் இருந்தாள். அவிழ்த்துவிடவும் தூங்கி எழுந்திருக்கின்றவளைப் போல சங்கரன்குட்டியைப் பார்த்து ''சங்கரன் குட்டி நீயா...?'' - என்று தெளிவா கேட்டாள்.

சங்கரன்குட்டி அப்பாடா என்று பெருமூச்சுவிட்டான். ''பிரேமி நீ இப்ப தெளிவாயிட்டே. உன்னைப் பிடிச்ச பாருக்குட்டி உன்னை விட்டு போயி...'' - என்று சந்தோஷமாக எகிறிக்குதித்தான்.

சப்தம் முன்னே நடந்து கொண்டிருந்த பிள்ளையின் காதில் விழ நம்பூதிரி சொன்னதை மறந்து அவர்களைப் பார்ப்பதற்காக திரும்பினார்.



அடுத்த நொடி உச்சந்தலையில் முடியைப் பிடித்து இழுக்கிற மாதிரி இருந்தது. கைகால்கள் இழுத்துக் கொண்டன.

அடித்தண்டில் வெட்டு விழுந்த மரம் தடதடவென்று சரிகிற மாதிரி அவரது உடல் தோட்டத்து மண்ணில் விழுந்தது. பாம்புக்கடிபட்டதுபோல வாயிலும் மூக்கிலும் நுரை ததும்ப ஆரம்பித்தது.

''முதலாளி...'' என்று அலறியபடி வந்த சங்கரன்குட்டி அவரது அவஸ்தையைப் பார்த்துவிட்டு 'நம்பூதிரி' என்று கத்தினான். நம்பூதிரியும் பின்னாலேயே வந்து கொண்டிருந்தார். பிள்ளையை நெருங்கியபோது பிள்ளையிடம் மூச்சு நின்று விட்டிருந்தது.

''ஈஷ்வரா...'' - என்று முணுமுணுத்த நம்பூதிரி ''பிள்ளைக்கு விதியில்லை. அதேபார்வதியிண்ட ஆத்மா இகூளை கொண்டு போய்! பவித்தரமான ஆத்மாக்களை நசிப்பிச்சால் அவை கர்மகாரியம் காணாத நிலையில் இப்படித்தான் பழி வாங்கும். இஆளுக்கு விதியில்லை... விதியில்லை.'' - என்றபடி கைகளை உதறினார்!

**- முற்றும் -**

- அந்த குறுநாவலை படித்து முடித்திருந்த ராதா புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நிமிர்ந்தாள். எதிரில் ராமலிங்கம்.

''என்ன நாவலை ஒருவழியா படிச்சு முடிச்சிட்டியா?''

''ஆமாங்க. ரொம்ப இண்ட்ரஸ்ட்டா இருக்கு. ஆனா நம்பத்தான் முடியலை.''

''மலையாள ரைட்டர் கதையாக்கும்?''

''ஆமாங்க. தமிழில ட்ரான்ஸ்லேட் பண்ணியிருக்காங்க தொந்தரவு தர்ற எதிரிகளை கொன்னுட்டா பிரச்சினை தீராது. அப்பதான் எதிரிக்கு அதிகபலம் கிடைக்குது. ஆவியாவந்து பாடாபடுத்திடு வாங்கன்னு மறைமுகமா சொல்றார் ரைட்டர்.''

''நீ அதை நம்பறியாக்கும்?'' - ராமலிங்கம் கேட்டபடி அந்த புத்தகத்தை கையில் எடுத்தார். 'காற்றில் கேட்ட

குரல்' என்கிற தலைப்பே மிக ரசமாக இருந்தது.

''என்னால நம்பவும் முடியலை. நம்பாம இருக்கவும் முடியலை. நீங்க படிச்சுட்டு சொல்லுங்க...'' - என்றாள் ராதா.

''படிச்சுட்டு என்ன சொல்றது. இப்பவே சொல்றேன். என் அனுபவத்துல ஆவிங்கறது ஒரு உண்மைன்னுதான். சொல்வேன். நான் பம்பாய்ல அப்ப இருந்தேன். ஒருநாள் கதவு தட்டற சப்தம். திறந்து பார்த்தா என் அம்மா. திடுதிப்னு வந்து நிக்கறாங்க. வாங்கம்மா... என்னம்மா இது திடுதிப்னு வந்து நிக்கறீங்க ஒரு லட்டர் கூட போலியேன்னு சொல்லி உள்ளே கூட்டிகிட்டு போனேன். என் ஆசை மகனைப் பாக்கணும்னு இருந்துச்சு அதான் பறந்து வந்துட்டேன்னு சொன்னவங்க என்னை கட்டிப் பிடிச்சு முத்தமெல்லாம் கொடுத்தாங்க. எனக்கு அவங்க செய்கை ஆச்சரியமாவும் கூச்சமாவும் இருந்திச்சு. அப்புறமா அடுத்த ஒரு மணிநேரத்துல அட்டகாசமா சமைச்சு எனக்கு போட்டாங்க. எவ்வளவு ஆசையா போட்டாங்க தெரியுமா? அப்ப பார்த்து டெலக்ராம்னு ஒருகுரல். சாப்பாட்டு கையோட வெளியபோய் டெலக்ராம்மை வாங்கிட்டு வந்து பார்த்தேன். அதுல 'மதர் எக்ஸ்பையர்ட் ஸ்டார்ட் இம்மீடியிட்லின்னு' எழுதியிருந்துச்சு. பக்குன்னுச்சு. உள்ள வந்து பார்த்தா அம்மாவைக் காணோம். இதை என்னன்னு சொல்றது ராதா...'' - ராமலிங்கம் சொன்னது ராதாவுக்கே சிலிர்ப்பாக இருந்தது.

''இதை நீங்களே இவ்வளவு நாளா சொன்னது இல்லீங்களே...''

''எதையும் சொல்றதுக்கு ஒரு நேரம் வரவேண்டாமா? இப்ப நினைச்சாலும் எனக்கு சிலிர்ப்பா இருக்கு ராதா...''

''உண்மைதான். அத்தைக்கு உங்க மேல அபரிமிதமான பாசம். அதான் உங்களுக்கு சோறு பொங்கி போட்றதுக்காகவே வந்துருக்காங்க. அது ஒருகுறையா உங்களுக்கு இருந்துடக்கூடாதுன்னு நினைச்சிருக்காங்க இல்லியா...''

''நிச்சயமா... இப்பகூட ரொம்ப சிக்கலான நேரங்கள்ள



அம்மா வழிகாட்டுன்னு அவங்களை வேண்டிக்குவேன். அப்ப எங்க இருந்தோ யார் வாய்மூலமாவோ நான் இருக்கேண்டான்னு ஒரு குரல் கேட்கும். யாரோ யார்கிட்டையோதான் சொல்லிகிட்டு இருப்பாங்க. ஆனா எனக்கு பளிச்சுன்னு உண்மை புரிஞ்சிடும்.''

''அப்ப இதைத்தான் அசரீரின்னு சொல்றாங்களோ.''

''யாருக்கு தெரியும். என்வரையில் அது எங்கம்மா குரல். அவ்வளவுதான். எவ்வளவு பெரிய பகுத்தறிவு வாதி வந்து இதை மறுத்தாலும் நான் என் கருத்தை மாத்திக்க மாட்டேன்.''

''அப்ப ஆவிகள் அதுக்கு சக்தி ஆசா பாசம் எல்லாம் இருக்குன்னு சொல்லுங்க...''

''நிச்சயமா... இல்லேன்னா எதுக்கு வெட்டியா திவசம் பண்றோம். பிண்டம் போட்றோம். எள்ளுத் தண்ணி விட்றோம்?'' ராமலிங்கம் அடுக்கிக் கொண்டே போனாள்.

''ஆன்ட்டி...'' - ஒருகுரல் இடையிட இருவரும் திரும்பினர். ஜெயந்தி!

''ஏய் ஜெயந்தி வா... வா...''

''எப்படி இருக்கீங்க ஆன்ட்டி?''

''நல்லா இருக்கேன்... நீ எப்படி இருக்கே?''

''இருக்கேன்...'' - ஜெயந்தியின் குரலில் சலிப்பு தொனித்தது. பார்வை தானாக மாடிப்படிப் பக்கம் போயிற்று.

''என்ன பாக்கறே... அவன் அப்புறமா வரவேயில்லை. எல்லா சாமானையும் அந்த பொண்ணே அள்ளிபோட்டு கிட்டு போயிட்டா...''

- ராதா சொன்னது அவளைக் சீறியது.

''சரி சரி அவனப்பத்தி என்ன பேச்சு. நன்றி கெட்டவன் அவன். முகத்துல முழிக்க தைரியம் இல்லாததாலதான் அவன் இந்த வீட்டுப் பக்கம்கூட வரலை. ஸ்கௌண்ட்ரல்... ஸ்கௌண்ட்ரல்.''

- ராமலிங்கம் எகிறிக்குதித்தார். ஜெயந்தி காதைப் பொத்திக் கொண்டாள்.

''அவர் கிடக்கறார்மா... நீ சொல்லு எங்க இவ்வளவு

தூரம்?''

- ராதா நடுவில் அவரைத் தள்ளிக் கொண்டு சென்று விசாரித்தாள். ஜெயந்தியும் பதில் ஏதும் பேசாமல் தன்ஹேண்ட் பேக்கில் இருந்து ஒரு கல்யாணப் பத்திரிகையை எடுத்தாள்.

''என்னம்மா... யாருக்கு கல்யாணம்.''

''எனக்குதான் ஆன்ட்டி...''

''உனக்கா... வெரிகுட்... வெரிகுட்!''

- பத்திரிகையை பார்த்த ராதாக்கா விழிகளில் ஏராளபளபளப்பு. பத்திரிகையில் மணமகன் பெயர் உள்ள இடத்தில் மனோஜ் B.E., M.S. (U.S.A) என்று இருந்தது.

''அமெரிக்க மாப்ளையா... சூப்பர்.'' - என்று ராதாக்காவின் உதடும் உற்சாகமாக கூவியது.

''என்னமோ ஆன்ட்டி. அப்பா ரொம்ப டார்ச்சர் பண்ணி ஹார்ட் அட்டாக் அது இதுன்னு என்னை கார்னர் பண்ணிட்டார். கல்யாணமே எனக்கு பிடிக்கலை. ஆனா அவர் கேட்கலை. ஒரு வகைல இது அவருக்காக நடக்கற கல்யாணம் ஆன்ட்டி.

''எதுக்கு அப்படியெல்லாம் சொல்றே? உன் நல்ல மனசுக்கு அருமையா வாழப்போறே நீ. சாமியார் மாதிரி யோசிக்காம சந்தோஷமா சிரி...''

- என்ற ராதா உள்ளே போய் சர்க்கரையை எடுத்து வந்து அவள் வாயில் போட்டாள்.

ஜெயந்தியும் ருசிக்கமாட்டாமல் அதை ருசித்தாள்.

''சரி ஆன்ட்டி நான் கிளம்பறேன்...'' - என்று உடனேயே கிளம்பினாள்.

''என்னம்மா அவசரம்... இருந்துட்டுதான் போயேன்.''

இல்ல ஆன்ட்டி... இங்க வந்தாலே எனக்கு தனா ஞாபகம்தான் வருது. எப்பவும் அவன் என் பின்னாலேயே வர்றமாதிரியும், ஜெயாம்மா ஜெயாம்மான்னு கூப்பிட்ற மாதிரியும் ஒரு பீலிங் சமயத்துல யாரோ என்னை இழுக்கற மாதிரி எல்லாமும் இருக்கு. எனக்கு ஒண்ணுமே புரியலை.'' - ஜெயந்தி நெற்றியை தேய்த்துக் கொண்டே சொன்னதைக் கேட்ட ராமலிங்கம் ''எல்லாம் கல்யாணம் ஆயிட்டா சரியாயிடும்மா நீ தைரியமா இரு.



குழப்பிக்காதே...'' என்று சமாதானப் படுத்தினார். ஜெயந்தி ஆமோதிப்போடு நடந்தாள்.

காரில் ஏறிக் கொண்ட அங்கிருந்தும் அகன்றாள். கார் வேகமெடுக்குமுன் திரும்பி அந்த பால்கனியை ஒரு பார்வை பார்த்தாள்.

கண்களை கண்ணீர் திரையிட்டது.

'இப்படி என்னை ஏமாத்திட்டியேடா...' - என்று உள்ளே ஒரு குரல் எகிறி விழுந்த கடல் அலையாட்டம் சீறி மனசுக்குள்ளே மோதிற்று.

## 13

மாலை நேரம்!

அந்த மருத்துவக் கல்லூரி மறுநாளைய ஞாயிற்றுக் கிழமை விடுமுறைக்கு அப்பொழுதே தயாராகி வெறிச் சோடிக்கிடந்தது.

கல்யாணத்திற்காக லீவ் அப்ளை செய்துவிட்டு ஆபீஸ் அறையை விட்டு வெளியே வந்த ஜெயந்திக்கு அப்பொழுதுதான் அனாடமி புரொபசர் டாக்டர் மித்ரா முகம் ஞாபகத்திற்கு வந்தது. அவருக்கு பத்திரிகை வைக்காவிட்டால் அவ்வளவுதான்... எப்பொழுது கல்யாணம்? என்று கேட்டு அடிக்கடி கலாட்டா செய்து கொண்டிருப்பார். எங்கே அவர்?

எதிர்ப்பட்ட ட்யூட்டர் சிவப்பிரகாசத்திடம் கேட்கவும் அனாடமி லேபில் தான் இருக்க வேண்டும் என்றார் அவர்.

ஒன்றுக்கு நான்கு சடலங்களுடன் அனாடமி லேயும் சற்றுத்தள்ளி இருந்தது. அதை நோக்கி நடந்தபோது ஹலோ என்றபடி வந்து ஒட்டிக் கொண்டான் லேப் அசிஸ்டெண்ட் வையாபுரி.

''கல்யாணம்னு கேள்விப்பட்டேன்...'' - என்றான்

''ஆமாம் வையாபுரி... அடுத்த வாரம். பத்திரிகை தரேன். அவசியம் வந்துடு.'' - என்று ஹேண்ட் பேக்கை தொடப் போனவளை தடுத்தான்.

''இப்ப வேண்டாம்மா. தப்பா எடுத்துக்காதீங்க.

இப்பதான் G.H.ல இருந்து ஒரு அனாதைப் பொணத்தை நம்ம லேபுக்காக கொண்டு போய் இறக்கிட்டு வரேன். பொணத்தை தொட்டகை...'' என்று சென்டிமென்ட்டாக பேசினான்.

''அன்க்ளைம்டு பாடியா?''

''ஆமாம்மா... யாரோ சின்ன வயசு போல இருக்கு. வைகைஅனைலகிடைச்சபொணமாம். ஆன்ட்டிப்பட்டி G.H.ல கிடந்து அல்லாடிட்டு இப்ப நம்ம காலேஜிக்கு வந்துருக்குது. அனாதை அதான் தற்கொலை செய்துகிட்டதாகேஸ்ஃபைல்பண்ணியிருக்காங்க. ஆனா பாத்தாஅப்படி தெரியலம்மா. எந்தகளவாணியோபிடிச்சு தள்ளி விட்ட மாதிரி அங்கங்க எலும்புங்க முறிஞ்சிருக்குது. பாவம். யார்பெத்த பிள்ளையோ கடைசில இங்கு நம்ம பசங்க கூறுபோட்டு பாக்கப்போற உடம்பா இங்க வந்துடுச்சு...'' - வையாபுரி பேசியபடி அவளோடு நடந்தான்.

''ஆமா டாக்டர் மித்ரா இப்ப எங்க இருக்கார்?''

''லேப்லதாம்மா இருக்கார்.'' - அவன் சொல்லலேப் வர சரியாக இருந்தது. உள்ளே நுழைந்தாள். எலும்புக் கூடுகள் சில தொங்கியபடி அவளை வரவேற்றன. வையாபுரி கையை கழுவிக்கொண்டு வருவதற்காக பாத்ரூம் பக்கம் போய்விட்டான். தனியே உள்ளே நடந்தாள். மித்ராவை அங்கும் காணோம்.

எங்கே?

தேடினாள்.

''ஜெயாம்மா...'' - திடும்மென்று தனாவின் குரல் போல்அழைப்பொலிகாதில்விழவும்பகீர்உணர்வுடன் நாலாபுரமும் பார்த்தாள்.

''வந்துட்டியா ஜெயாம்மா...'' - திரும்பவும் கிசுகிசுப்பானஅதே குரல்.

''யாரது?''

''நான்தான் ஜெயாம்மாதனா...''

''தனாவா... இடியட் எங்க இருக்கே? இங்க என்ன பண்றே?''



''கோபப்படாதே... நான் உன்கிட்டதான் இருக்கேன். நான் ஒருதப்பும் பண்ணலை ஜெயாம்மா. எல்லாம் உன் அப்பாவோட நாடகம். அதுல நான் இப்ப என் உடம்பை தொலைச்சிட்டேன். உன்னைக் கூப்பிட்டு கூப்பிட்டு அலுத்துப்போயிட்டேன் தெரியுமா?''

''என்னடா உளற்றே... எங்க ஒளிஞ்சுகிட்டு இருக்கே வெளிலவா... எது நாடகம் நீ போட்டதா... இல்லை என் அப்பா எனக்கு இப்ப ஒரு வழி காட்டிகிட்டிருக்காரே அதா... இந்த முறை நான் ஏமாற மாட்டேன்டா. கமான் வேர்ஆர்யூ...? என் முன்னால வா...'' கத்திக்கொண்டே நடந்தாள் வையாபுரி கொண்டு வந்து சேர்த்திருந்த அனாதைப் பிணம் கிடந்த ஸ்ட்ரெச்சரில் தெரியாமல் மோதி தேங்கி நின்றாள். அவள் மோதிய வேகத்தில் ஸ்ட்ரெச்சர் பிணத்தின் பாடம் செய்யப்பட்ட உடலின் வலதுகை மட்டும் மார்பில் இருந்து விலகி மூடியிருக்கும் வெள்ள்ள ஆடையை விலக்கிக்கொண்டு சொத்தென்று விழுந்து வெளித் தெரிந்தது.

அதைப் பார்த்தவள் திடுக்கிட்டு விலகவும் அது அவளது சுடிதாரின் துப்பட்டாவை எட்டிப் பிடித்தது! ஐய்யோ...

ஜெயந்தி அலற அலற துப்பட்டாவோடு சேர்ந்து அவளை இழுத்தது. அது இழுத்த வேகத்தில் அந்த பிணத்தின் மேல் விழுந்தாள் வீல் என்று அலறிக் கொண்டு நிமிர்ந்து ஓடப் பார்த்தாள். அப்பொழுது மூடிக்கிடக்கும் ஆடை விலக பிணத்தின் முகம் பளிச்சென்று தெரிந்தது.

சுண்டிச்சுருங்கி கருவேலங்கட்டை சறுக்கும் நிலைக்கு போய் விட்டாலும் அவளால் அந்த முகத்தை உணர முடிந்தது.

'தனா...!' - அனாடமி லேபே அதிரும்படி அலறினாள் அவள்!

ரகசியமாக விஸ்கியை சுவைத்துக்கொண்டிருந்தார் அருணாசலம். கூடவே ஊற்றிக்கொடுத்துக்கொண்டிருந்

தான் மனோஜ்.

''போதும்மாமா... ரொம்ப வேண்டாம்'' என்று பாட்டிலைசற்றுதள்ளியும்வைத்தான்.

''நாம இப்ப ஒரு வெற்றியை கொண்டாடிகிட்டு இருக்கோம் மனோஜ். இதுக்கு எதுக்கு கட்டுப்பாடு. கமான் ஊத்து...'' - அவர்கோப்பையை நீட்டும்போது தொலைபேசிஅலறியது.

மனோஜ் எழுந்து போய் எடுத்து காதைக் கொடுத்தான்.

''திஸ் ஈஸ் மிஸ்டர் அருணாச்சலம்...?''

''ஹூ ஈஸ் ஸ்பீக்கிங்?''

''மெடிகல் காலேஜ்ல இருந்து டாக்டர் மித்ரா பேசறேன். ஐ ஹேவ் பேட் நியூஸ் ஃபார்யூ?''

''பேட் நியூஸ்?''

''யெஸ்... மிஸ் ஜெயந்தி இப்ப உயிரோட இல்லை. அனாடமிலேப்ல டிசெக்‌ஷனுக்காக வந்த ஒருபாடியை கட்டிப்பிடிச்சுக்கிட்டே செத்துக் கிடக்கறாங்க. என்ன நடந்துச்சுன்னே தெரியல. கொஞ்சம் உடனேபுறப்பட்டு வரரமுடியுமா?''

- மனோஜ் அடுத்தநொடி ரிசீவரை நழுவ விட்டான். தடுமாற்றத்தோடு அருணாச்சலத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

**- முற்றும் -**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (ப்ரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 6/352, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 8544294

...றார் என்று படபடப்பாகவும் இருக்கிறது.

ஒன்று மட்டும் உறுதி!

எல்லா தரப்பினரையும் திருப்தி செய்து ஒரு நல்ல பாதிப்பை ஒவ்வொரு நாவலிலும் நான் ஏற்படுத்தியே தீருவேன்.

இதனாலேயே 'நல்ல விளம்பரம் - அட்டகாசமான போஸ்ட்டர்கள்' என்று ஒரு ரவுண்டு வர ஆசைப்பட்ட திரு.அசோகனையும் நான் சற்று கட்டிப்போட்டேன்.

''ஒரு நாவலுக்கு விளம்பரம் அதன் முந்தைய நாவலாலேயே வரவேண்டும். படித்தே தீரவேண்டும் என்ற ஆசையை அந்த நாவலே உருவாக்கித்தர வேண்டும். என் நாவல்கள் அதைச் செய்யும்'' என்றேன். 'செய்யத் தொடங்கி விட்டது இந்திராஜி' என்று திரு.அசோகனும் சந்தோஷப் பட்டார். எனக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த மாத காற்றில் கேட்ட குரல் நாவலும் உங்களை நிச்சயம் கவரும்.

இது ஒரு இதமான குரல். நம்பிக்கையூட்டும் குரல். நம்மில் பலருக்கும் இது கேட்டிருக்கிறது. தொடர்ந்து இந்த குரல் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தால் போதும் என்று நினைக்க வைக்கும் ஒரு குரல். படித்துவிட்டு எழுதுங்கள்.

'மகிழ்ச்சியூட்டும் தீபாவளி வேறு வந்துவிட்டது. ஒரு சூப்பர் நாவல் கொடுங்க இந்திராஜி' என்றார் அசோகன்.

'ஒவ்வொரு நாவலும் சூப்பர்தானே அசோகன்.

'இது கொஞ்சம் பக்கம் கூடுதலான சூப்பர் நாவல் ஜி!' என்றார். அப்படியே, 'தேவியில் பண்ணின 'மாயநிலவு' மாதிரி'காற்று காற்று உயிர்' மாதிரி ஒரு நெத்தியடி வேணும் என்றார்.

யோசித்தேன். கற்பனையில் உருண்டு வந்து விழுந்தது **'நூறுகோடி ரூபாய் வைரம்!'** இது ஒருசமஸ்தானத்திடம் இருந்தது. இன்றும் இருக்கிறது - ஆனால் இருப்பது தெரியாமல், மற்றதை நாவலில் தெரிந்து கொள்ளுங்கள். இது தீபாவளி ஒளிப்புனலை இந்த வைரம் அதிகரிக்கும். இது நிச்சயம்.

**அன்புடன்,**

**இந்திரா சௌந்தர்ராஜன்.**